பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 25 வியாழக்கிழமை 10.12.2020 கதிர் 35

### இது ரகசியம் அல்ல!

வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டுவது என்பார்கள். அல்லது பொல்லைக் கொடுத்து அடிவாங்குவது என்பார்கள்.

அப்படி ஒரு சம்பவம் பற்றிய தகவல் இது:-

மஹர சிறைச்சாலைக் கலவரத்தை அடுத்து பக்கம்02 »

## நிலையியல் கட்டளைச் சட்டப் புத்தகத்தை தூக்கியெறிந்து சாமர சம்பத் சண்டித்தனம்



### நாடாளுமன்றில் நேற்று அமளிதுமளி

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச்சட்டப்புத்தகத்தை நேற்று சபையில் வீசியெறிந்ததால் நாடாளுமன்றத்தில் பெரும் அமைதியின்மை ஏற்பட்டது.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. மனு நாணயக்கார, ஸ்ரீலங்கா பக்கம் 11 »

## கோட்டாபய அரசின் கன்னி 'பட்ஜட்' இன்று மாலை இறுதி வாக்கெடுப்பு

### ஜனவரி 5இல் நாடாளுமன்றம் மீண்டும் கூடும்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் கன்னி வரவு – செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது.

அரசும் அதன் பங்காளிக் கட்சிகளும் வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களிக் கவுள்ளதுடன் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பக்கம் 02 »

## களுத்துறையில் ஒரு பகுதி முடக்கம்


களுத்துறை தெற்கு பகுதியில் ஒருபகுதி நேற்று மாலை முதல் முடக்கப்பட்டுள்ளது.

இதன்படி குரே வீதி இவ்வாறு முடக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப்பகுதியில்கொரோனா நோயாளர்கள் பலர் அடையாளம்காணப்பட்டுள்ளதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# எமக்கு விடுதலை கிடைக்க ஓரணியில் செயற்படுங்கள்!

## சகலரிடமும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர் தமிழ் அரசியல் கைதிகள்



"சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமையையடுத்து ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விடுதலை செய்யப்படுவோர் பட்டியலுக்குள் தமிழ் அரசியல் கைதிகளையும் உள்வாங்குமாறு, அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் தனித்தனியான கருணை மனுக்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு முன்வைக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இதன்மூலம் எமக்கும் சமூகத்துடன் இணைந்து வாழ ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதுடன் எம்மைப் பிரிந்து நித்தமும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் எமது உறவுகளின் கண்ணீருக்கும் ஒரு முடிவு கிட்டும் என எதிர்பார்க்கின்றோம்."

– இவ்வாறு கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் நேற்றிரவு வெளிவந்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 02 »

## நீதிமன்ற சுயாதீனத்தை உறுதிப்படுத்த வேண்டும்

### சஜித் அணி வலியுறுத்து

நீதிமன்ற சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்க நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. அதனைத் தொடர்ந்து பாதுகாக்கவேண்டும். எமது ஆட்சிக் காலத்தில் நீதிமன்றம் சுயாதீனமாக இருந்ததால்தான் கோட்டாய ராஜபக்ஷவுக்கு இன்று நாட்டின் ஜனாதிபதியாக இருக்க முடி கின்றது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நீதி அமைச்சருமான தலதா பக்கம் 02 »

## செட்டிகுளம் பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவு மீண்டும் நடக்கும்

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், டிச. 10

செட்டிகுளம் பிரதேச சபைக்கான தவிசாளர் தேர்வினை மீண்டும் நடாத்த உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுத்தில் ஆலோசனை வழங்கியுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் .

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டம் பக்கம் 02 »

## இலங்கையில் மேலும் இருவர் பலி கொரோனாச் சாவு 144 ஆக உயர்வு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 144 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் பக்கம் 02 »

## உரிமை கோராத 19 சடலங்களையும் உடனடியாக எரிக்குமாறு பணிப்புரை

இலங்கையில் கொரோனா காரணமாக உயிரிழந்து, உரிமை கோரப்படாத சடலங்களை உடனடியாக எரிப்பதற்கு சட்டமா அதிபர், சுகாதார அமைச்சுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களை எரிப்பதற்கு குடும்ப உறுப்பினர்கள் மறுப்புத் தெரிவித்து வருகின்ற நிலையில், சடலங்களை எரிக்க முடியுமா? என்று சுகாதார அமைச்சு, சட்டமா அதிபரின் ஆலோசனை கோரியிருந்தது.

இந்தநிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைய உரிமை கோரப்படாத சடலங்களை எரிக்க முடியும் என்று சட்டமா அதிபர் தப்புள டி லிவேரா பணிப்புரை வழங்கியுள்ளார்.

இலங்கை முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க பக்கம் 02 »

## கட்டமைக்கப்பட்ட இனவாதமே சித்தாந்தமாகக் கட்டவிழ்கின்றது



நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்று நாடாளுமன்றில் சாட்டையடி

(விவரம் 06ஆம் பக்கத்தில்...)

## நெடுந்தீவிற்கு இன்று தொடக்கம் நெடுந்தாரகை மீண்டும் சேவையில்

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



நெடுந்தீவிற்கான அரச பயணிகள் போக்குவரத்து சேவைகள் தடைப்பட்டுள்ள நிலையில் நெடுந்தாரகை பயணிகள் படகின் போக்குவரத்து சேவையை இன்று தொடக்கம் 02 »

## 30 ஆயிரத்தைக் கடந்த கொரோனாத் தொற்று

### நேற்றும் 694 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்றும் 694 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 26 ஆயிரத்து 516 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

அதேவேளை, நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 72 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 21 ஆயிரத்து 800 பேர் குணமடைந்துள்ளனர். 02 »







## மஹர சிறைச்சாலை வன்முறை: இடைக்கால விசாரணை அறிக்கை நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு



மஹர சிறைச்சாலை கலவரம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகவும், பரிந்துரைகளை முன்வைப்பதற்காகவும் நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய விசாரணைக்குழுவின் இடைக்கால அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிரடி மாற்றம் ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்தார். சிறைத்துறை நிர்வாக அமைச்சராக லொஹான் ரத்வத்த நியமிக்கப்பட்டார்.

ஏற்கனவே பழைய பல சம்பவங்களினால் 'எடுத்ததும் சுடும் குழப்படிக்காரப் பையன்' என்ற பெயரிலிருந்தவர் அவர். சிறைக்குப் பொறுப்பாக அவரை நியமித்தமை, அவருக்குரிய கைவரிசையைக் காட்டியாவது சிறைத்துறையை 'கிளியர்' பண்ணும் திட்டம்தான் அரங்கேறுகின்றது என்ற கருத்தையே தந்தது.

நேற்றும் கூட நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சுத் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய சுமந்திரன் எம்.பி, *"வழமையாக 'சிறைச்சாலை மறுசீரமைப்பு' அமைச்சர் என்றுதான் நியமனம் கொடுப்பார்கள் ஆனால் இவருக்கு (லொஹான் ரத்வத்தைக்கு) 'சிறை நிர்வாக அமைச்சர்' என்று நியமனம் கொடுத்திருக்கின்றார்கள். அவரின் பாணியில் சிறைகளை நிர்வகிக்கும் திட்டம் போல"* – என்று குறிப்பிட்டமை இந்த விவகாரத்தை ஒட்டித்தான் போலும்.

கடந்த வாரம் லொஹான் ரத்வத்தை சிறை நிர்வாக அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் தென்னிலங்கை ஊடகங்களில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

திடீரென்று ஒரு நாள் நள்ளிரவு வேளை தென்னிலங்கையின் முக்கிய புள்ளி ஒருவர் அநுராதபுரத்தில் துட்டகைமுனு மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படும் ருவன்வெலிசாய தாதுகோபுரம் பகுதிக்குத் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் போய் இறங்கினார். அகால வேளையில், போதையில், மெய்க்காவலர் புடைசூழ வந்திறங்கிய அந்தப் புள்ளி உள்ளே போகவேண்டும் என்று அடம்பிடித்தாராம். உரியவேளை முடிந்து நேரமாயிற்று, ஆலயம் பூட்டப்பட்டுவிட்டது, இனி உள்ளே செல்ல முடியாது என்றனர் அந்த இடத்தின் பாதுகாவலர்கள். போதையில் இருந்த அந்தப் புள்ளி அவ்விடத்திலிருந்த பாதுகாவலரைத் தூஷண வார்த்தையினால் திட்டித் தாக்கவும் செய்தார் – என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால் அந்தத் தென்னிலங்கையின் முக்கிய அரசியல் புள்ளி யார் என்பதை அவை பெயர் குறிப்பிட்டுத் தெரிவிக்கவில்லை. அதனால் அவர் யார் என்று தெரியாமல் இருந்தது.

இதற்கிடையில் நேற்று நாடாளுமன்ற விவாதத்தில் எதிரணியின் பிரமுகர் தலதா அத்துக்கோறளை பேசிய சமயம் தேவையில்லாமல் அடிக்கடி வாயைக் கொடுத்துக் குழப்பிக் கொண்டிருந்தார் லொஹான் ரத்வத்த.

ஒரு கட்டத்தில் தலதா அத்துக்கோறளைக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

*"இது என்ன ருவென் வெலிசாயவா அட்டகாசம் பண்ணுவதற்கு?"* – என்ற சாரப்பட லொஹான் ரத்வத்தையைப் பார்த்து அப்பட்டமாகக் கேட்டு விடயத்தைப் போட்டுடைத்தார் தலதா அத்துக்கோறளை.

இதைத் தான் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டுவது என்பதோ....?

★ ★ ★

நேற்று நாடாளுமன்றத்தில் பேசிய நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டிய படி, எதிர்வரும் மார்ச்சில் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில், இலங்கைக்கு நெருக்கடி காலம் காத்திருக்கின்றது என்பது உண்மைதான்.

அங்கு கிளம்பக் கூடிய நெருக்குவாரங்களைச் சமாளிப்பதற்காக இந்தியாவுடன் கைகோர்க்க – அணி சேர்ந்து நிற்க – விரும்புகின்றது கோட்டாவின் கொழும்பு அரசு நிர்வாகம் என்பது உள்வீட்டுத் தகவல்.

புதுடில்லியைத் தனது 'லைனு'க்குக் கொண்டு வருவதற்காக புதுடில்லி அண்மையில் போட்ட 'அன்புக்கட்டளைகள்' சிலவற்றை சிரமேற் கொண்டு முன்னெடுப்பதில் கொழும்பு தீவிரமாக இருக்கின்றதாம்.

அதில் ஒன்று – விரைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாகும்.

மார்ச்சில் ஜெனீவாவை எதிர்கொள்ளும் போது புதுடில்லி எதிர்பார்த்தபடி – புதுடில்லி விரும்பியபடி – இங்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு அந்த விடயங்கள், தேர்தல் விவகாரங்கள் கட்டவிழத் தொடங்கியிருக்கும் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

யார் குத்தினாலும் நெல் அரிசியாகினால் சரி என்ற மாதிரி எக்காரணத்துக்காயினும் மாகாணசபைத் தேர்தலை இனி மேலும் தாமதிக்காமல் நடத்தினால் சரி.

புதுடில்லி அழுத்தத்திலேனும் அது நடந்து முடிந்தால் நல்லது.

நாடாளுமன்றத் தேர்தலில் தோற்று வீட்டில் 'சும்மா' இருக்க முடியாத நம் முன்னாள் எம்.பிக்கள் சிலருக்குப் போக்கிடம் வேண்டுமல்லவா? அதற்காகவேனும் மாகாணசபைத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்தி முடியுங்கப்பா..!

– மின்னல்–

## கோட்டாபய அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சிகள் எதிர்த்து வாக்களிக்கவுள்ளன.

2021ஆம் நிதியாண்டுக் கான வரவு – செலவுத் திட்டம் கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி நிதி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

நவம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடத்தப்பட்டு, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் ஆரம்பமானது. இந்தநிலையிலேயே வரவு – செலவுத் திட்டம் மீது இன்று மாலை இறுதி வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

சிற்சில திருத்தங்கள் சகிதமே வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

வரவு – செலவுத் திட்டக் கூட்டத் தொடர் இன்று முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும். அதன்பின்னர் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு ஜனவரி மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகும்.

## செட்டிகுளம் பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரு தடவைகள் சபையின் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டபோதும் இரு தடவைகளும் அது தோற்கடிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபையின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டு முதல் இரண்டு ஆண்டுகளிற்கான பாதீடுகளும் சபையின் உறுப்பினர்களின் அங்கீகாரம் இன்றியும் முதல்வர் அல்லது தவிசாளர்களினால் அங்கீகரிக்கும் சட்ட ஏற்பாடு உள்ளது.

இதேநேரம் 3 ஆவது பாதீட்டிற்கான அங்கீகாரம் சபையே வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அது தோற்கடிக்கப்பட்டால் 14 நாள்களுக்குள் மீண்டும் திருத்தங்களுடன் அது சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அப்போதும் தோற்கடிக்கப்பட்டால் சபையின் முதல்வர் அல்லது தவிசாளர் மீது பெரும்பான்மை உறுப்பினர்களின் அவ நம்பிக்கையாக அது கருதப்படுகின்றது.

இதன் அடிப்படையில் செட்டிகுளம் சபையின் அடுத்த கட்டம் தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அனுப்பியிருந்தார். ஆளுநர் குறித்த சபைக்கு மீண்டும் தவிசாளர் தெரிவுக்கான வாக்கெடுப்பை நடாத்துமாறு அறிவித்துள்ளார். இதனால் விரைவில் ஆணையாளரின் ஏற்பாட்டில் தவிசாளர் தேர்வு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உரிமை கோராத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமூகத்தவர்கள் கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதி கோரி வருகின்றனர்.

அது தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் இறுதிக்கிரியைகளுக்கான அனுமதியை வழங்க மறுத்து வருகின்றனர்.

இதனால், இதுவரையில் கொரோனா காரணமாக உயிரிழந்த 19 பேரின் சடலங்கள் கொழும்பில் எரிக்கப்படாமல் உள்ளன.

சட்டமா அதிபரின் பணிப்புரையைத் தொடர்ந்து, கொழும்பு மாநகர சபை குறித்த சடலங்களை எரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## எமக்கு விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமையையடுத்து, ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய அரசு சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது என அறியமுடிகின்றது. அந்தவகையில் தகுந்த பொறிமுறையை இனங்கண்டு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 8 ஆயிரம் கைதிகளை விடுவிப்பதற்கும் மரணதண்டனை மற்றும் ஆயுள்தண்டனைக் கைதிகளின் தண்டனைக் காலத்தை வரையறுப்பதற்குமான முன்னாயத்தங்களை மேற்கொண்டிருப்பதாகச் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்தி அனைத்து சிறுபான்மைத் தரப்பினரும் கட்சி, அரசியல், பிரதேச வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு மனித நேயத்துக்கு மதிப்பளித்து கொள்கையளவில் ஒன்றுபட்டு எமது விடுதலைக்கு வழிசமையுங்கள் என விநயமுடன் வேண்டுகின்றோம்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சிறையே வாழ்க்கை எனச் சீரழிந்து கொண்டிருக்கும் அரசியல் கைதிகளாகிய நாம் உயிரை மட்டுமே கையில் பிடித்துக் கொண்டு நிகழ்காலத்தை நகர்த்துகின்றோம். நாட்டில் தேர்தல்கள் வருகின்ற போதும், ஆட்சி அதிகாரங்கள் மாறுகின்ற போதும் எங்களது சிறை வாழ்வுக்கு விடிவு பிறக்கும் எனக் கண்ட கனவுகள் எல்லாம் கானல் நீராகிப் போனது.

விடுதலையை வலியுறுத்தி நாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட போதெல்லாம் திறந்த வாக்குறுதிகளும், தீராத நோய்களுமே எமக்கு மிஞ்சிப் போனது. இதுவரை தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு எம்மோடு சிறையிருந்த 10 இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் சிறைக்குள்ளேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்கள். அதுதவிர சிறை வன்முறைகளின்போது நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். தற்போது உயிர்க்கொல்லித் தொற்று நோயான கொரோனா சிறைக் கொத்தணியாக மாறி ஆயிரக்கணக்கான கைதிகளை அச்சுறுத்துவதுடன், சில உயிர்களையும் பலிகொண்டிருக்கின்றது.

எமது குடும்ப உறவுகள் உழைக்கும் கைகளை இழந்து நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். எமது பிள்ளைகள் தந்தையரின் பாசத்துக்காக ஏங்கித் தவிக்கின்றார்கள். வயதான எமது பெற்றோர் தமது இறுதிக்காலத்திலாவது 'என் பிள்ளை கொள்ளியிட உயிரோடு வருவானா?' எனக் கண்ணீரோடு காத்திருக்கிறார்கள். எனவே, சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் காரணிகளால் சிறை வைக்கப்பட்டுள்ள எமது விடுதலைக்கு வழிசமைக்க அனைவரும் முன்வாருங்கள்.

இன்று சிறைகளில் வாடுகின்ற நாம் சுகபோகமாக வாழத் தெரியாமல் சிக்குப்பட்டுப் போயிருப்பவர்கள் அல்லர். எமது சொந்த சுயநல இலாபத்துக்காகச் செயற்பட்டு நாம் சிறைக்கு வந்தவர்கள் அல்லர் என்பதைத் தயவு செய்து சற்றுப் புரிந்து கொள்ளுங்கள்.

மூன்றரை கால போர் முடிவுறுத்தப்பட்டு 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டு தசாப்தமொன்று கடந்துள்ள நிலையிலும்கூட, 20 வருடங்களாகச் சிறையிருக்கும் எமது விடுதலை வாசல் திறக்கப்படவில்லை என்பது பெரும் துக்கமல்லவா?

எனவே, சர்வமதத் தலைவர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சமூக நல அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என அனைத்துத் தரப்புக்களும் அரசியல் கைதிகளான எமது விடுதலை விடயத்தில் தத்தமது மனிதாபிமானத்தை வெளிப்படுத்த வேண்டும்.

அரசமைப்பின் பிரகாரம் சிறைக் கைதிகளின் விடயத்தில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கின்றது. அந்தவகையில், ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விடுதலை செய்யப்படுவோர் பட்டியலுக்குள் தமிழ் அரசியல் கைதிகளையும் உள்வாங்குமாறு, அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் தனித்தனியான கருணை மனுக்களை ஜனாதிபதியின் கவனத்துக்கு முன்வைக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதன்மூலம் எமக்கும் சமூகத்துடன் இணைந்து வாழ ஒரு சந்தர்ப்பம் கிடைப்பதுடன் எம்மைப் பிரிந்து நித்தமும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் எமது உறவுகளின் கண்ணீருக்கும் ஒரு முடிவு கிட்டும் என எதிர்பார்க்கின்றோம் – என்றுள்ளது.

## இலங்கையில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை 131 பேர் உயிரிழந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

## 30 ஆயிரத்தைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

8 ஆயிரத்து 128 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 144 பேர் உயிரிழந்துள்ளனர்.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது நீதி அமைச்சர் அலி சப்ரியால் மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன், முழுமையான அறிக்கை ஒரு மாதத்துக்குள் முன்வைக்கப்படும் எனவும் நீதி அமைச்சர் கூறினார்.

## நீதிமன்ற சுயாதீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துகோரள தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நீதி மற்றும் தொழில் அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## நெடுந்தீவிற்கு இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயற்படுத்துவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நெடுந்தாரகை படகை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேவையான எரிபொருளை வீதி போக்குவரத்து அதிகார சபையின் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் இன்று தொடக்கம் நெடுந்தாரகை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது என ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு தெரிவித்தது.

நெடுந்தீவு – குறிகட்டுவான் இடையிலான பயணிகள் போக்குவரத்தில் வடதாரகை, குமுதினி மற்றும் நெடுந்தாரகை ஆகிய அரச படகுகள் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் வடதாரகை பயணிகள் படகு பழுதடைந்து திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவு பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வந்த நெடுந்தாரகை பயணிகள் படகு ஒரு தடைவை குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவிற்குச் சென்று வருவதற்கு சுமார் 110 லீற்றர் டீசல் தேவைப்பட்ட நிலையில் ஏற்பட்ட அதிக செலவினம் காரணமாக அந்தப் பிரதேச சபையினால் நெடுந்தாரகையின் சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

இதற்கிடையில் அண்மையில் ஏற்பட்ட புரெவி புயல் காரணமாக குமுதினி பயணிகள் படகும் பழுதடைந்துள்ள நிலையில் நெடுந்தீவிற்கான அரச போக்குவரத்துக்கள் முழுமையாக பாதிப்படைந்துள்ளன.

இந்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு பிரதேச மக்களினால் கொண்டு வரப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட கடற்றொழில் அமைச்சர் குமுதினி படகினைப் பழுதுபார்த்து விரைவில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அறிவுறுத்தியமையுடன் இன்று தொடக்கம் நெடுந்தாரகை பயணிகள் படகினை சேவையில் ஈடுபடுத்துவத்தற்கும் அதற்கு தேவையான எரிபொருளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. – என்று தெரிவிக்கப்பட்டது.

## சுகாதார விதிகளை மீறிய 1,181 பேர் இதுவரை கைது

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை தொடர்பில் இதுவரையில் 1,181பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு :-

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை தொடர்பில் கடந்த புதன்கிழமை காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை தொடர்பில் 1,181 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒன்பது பொலிஸ் பிரிவுகளும், 25 கிராம சேவகர் பிரிவுகளும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் அந்த பகுதிகளை விடுவிக்கும் வரையில், அப்பகுதிவாழ் மக்களை தொடர்ந்தும் அவர்களது வீடுகளிலேயே இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதேவேளை நாட்டு மக்கள் அனைவருமே தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை பின்பற்ற வேண்டியதும் கட்டாயமாகும். - என்று தெரிவித்தார்.

## அரசியல் பழிவாங்கல் கைதில் இருந்து விடுவிக்கப்பட்டேன்: சகலருக்கும் நன்றி

### வலி. கிழக்குத் தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு



அரசியல் பழிவாங்கல்களில் இருந்து நீதிமன்றம் மூலம் தனக்குப் பாதுகாப்புக் கிடைத்துள்ளதாகவும் இவ் இடர்நிலைமைகளில் தன்னுடன் சகல வழிகளிலும் ஒத்துழைத்த சகலருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கிறேன் எனவும் வலிகாமம் கிழக்கு பிர தேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரி வித்தார்.

தன்னை பொலிஸார் கைது செய்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக மல்லாகம் நீதிமன்றில் விண்ணப்பம் செய்து முன்பிணை கிடைக்கப்பெற்ற நிலையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாங்கள் அபிவிருத்திக்கு ஒருபோதும் தடையில்லை. எமது மக்கள் நீண்டகாலமாக அபிவிருத்தியில் புறந்தள்ளப்பட்டே இருக்கின்றனர். அப்படியிருக்க எமது சபையினால் முழுமையான அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு நிதி வளம் போதாது என்பது சகலரும் அறிந்த விடயம்.

இந்நிலையில் எமது பகுதிகளுக்கு அற்பசொற்பமான அபிவிருத்திகளே தென்னிலங்கையுடன் ஒப்பிடும் போது மத்திய அரசிடம் இருந்து கிடைக்கின்றன. வழங்குகின்ற அபிவிருத்திகளை நாட்டின் அதிகாரப் பகிர்வு வழிவகைகளில் ஒன்றாக அமைகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் சட்டங்களையும் ஒழுங்குகளையும் மீறாது நடைமுறைப்படுத்துங்கள் என்றே கேட்கின்றோம். உள்ளூராட்சி மன்றங்களைப் புறந்தள்ளி அரசியல் நோக்கங்களுக்காக மாத்திய அரசாங்கத்தின் பொறிமுறை செயற்படக்கூடாது.

இதனை நான் வலியுறுத்துகையில் ஜனநாயக ரீதியிலான அதிகாரப்பகிர்வை நடைமுறைப்படுத்த முயற்சிக்கையில் என் மீது அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. எமக்கு எதிராக அரச திணைக்களங்களை அழுத்தங்களைப் பிரயோகித்து திசை திருப்ப முயற்சிகள் நடைபெறுகின்றன. பொலிஸார் என்னைக் கைது செய்ய அலுவலகம், நான் செல்லும் இடங்களுக்கு சென்றிருக்கின்றார்கள் என்றால் அது உயர்மட்ட அரசியல் அழுத்தத்தின் விளைவே ஆகும். நான் பொலிஸார் பெற்ற வாக்குமூலங்களுக்குப் பரிபூரண ஒத்துழைப்பு வழங்கினேன். கைது முயற்சி அரசியல்பழிவாங்கல் என்றபோதே நான் நீதிமன்றை நாடினேன். அப்போது இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் தொலைபேசிவாயிலாக அறிவித்தேன். அரசியல் பழிவாங்கல் இடம்பெறும் என்றால் பாதுகாப்புப் பெறுவது எனது உரிமை.

இந்நிலையில் நான் நீதிமன்றின் உதவியினை நாடி எனக்குப் பாதுகாப்புத் தேடிக்கொண்டுள்ளேன். நீதிமன்றம் எமது முன்பிணை மனுவை அராய்ந்து முன்பிணை அளித்துள்ளது. நாட்டின் பிரஜை என்ற வகையிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்ற வகையிலும் எந்நிலையிலும் சட்டம் ஒழுங்கிற்கும் நீதிமன்றின் கட்டளைகளை மதிக்கின்றேன். நான் பழிவாங்கலில் இருந்து பாதுகாப்புப் பெற்ற நிலையில் எந்நிலையிலும் சட்டம், ஒழுங்கிற்கு பரிபூரண ஒத்துழைப்பு வழங்குவேன்.

இதேவேளை எனது கைதிற்கு எதிராகத் திரண்ட மற்றும் ஒத்துழைத்த தமிழ் அரசியல் தலைவர்கள், வழக்கினை முன்கொண்டு சென்ற சட்டத்தரணிகள், தகவல்களை வெளிப்படுத்திய ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகத்தவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.- என்றார்.

## ஷானி அபயசேகரவின் பிணை மனு நிராகரிப்பு!

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா உயர் நீதிமன்றத்தால் இந்த விண்ணப்பம் நேற்று (புதன்கிழமை) நிராகரிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகர மற்றும் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் றோஹண மெண்டிஸ் ஆகியோர் சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு எதிரான காரணிகள் குறித்து ஆராய்வு!

### உதய கம்மன்பில கூறுகிறார்



கொழும்பு, நவ.10

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவை நாடாளுமன்ற அனுமதியுடன் மாத்திரமே நீக்க முடியும். பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க முன் வைத்த காரணிகள் தொடர்பாக ஆராயப்படுகிறது என அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மின்சாரத்துறை, கனியவள கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நேரடியாக அதிகாரம் செலுத்துகிறது. மின்சார கொள்வனவு மற்றும் மின் விநியோகம் உள்ளிட்ட விடயங்களில் மின்சாரத்துறை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற வேண்டும்.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்ற கேள்வி எழுந்ததைத் தொடர்ந்து ஆணைக்குழுவை நீக்க வேண்டும் என்று உரிய தரப்பினரால் குறிப்பிடப்பட்டது.

ஒருசில காரணிகளைக் கொண்டு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க முடியாது. நாடாளுமன்ற சட்ட ஏற்பாட்டின் ஊடாகவே இந்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற அனுமதி ஊடாகவே பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை நீக்க முடியும்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் பொறுப்புக்கள் இதுவரையில் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளனவா, ஆணைக்குழுவை நீக்கினால் அதற்கு வழங்கிய பொறுப்புக்களை தொடர்ந்து எவ்வகையில் முன்னெடுத்து செல்வது என்பவை தொடர்பில் ஆராயப்படுகிறது. - என்றார்.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 10.12.2020 | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 பொருளியல் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 பொருளியல் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 கணக்கீடு (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 தமிழ் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 08 வரலாறு (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 தமிழ் (த)(1ஆம், 2ஆம்) தரம் - 09 வரலாறு (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 விஞ்ஞானம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 விஞ்ஞானம் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 இணைந்த கணிதம் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 இணைந்த கணிதம் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 தமிழ் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 07 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 வணிகக்கல்வி (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 வணிகக்கல்வி (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 கணக்கீடு (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 சிங்களம் (த) (1ஆம், 2ஆம்) தரம் - 06 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 விவசாய விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 விவசாய விஞ்ஞானம் (த) |

## வெளிநாடுகளில் 40 ஆயிரம் பேர் நாடு திரும்பும் எதிர்பார்ப்புடன்!

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் சுமார் 40 ஆயிரம் பேர் நாடு திரும்பும் எதிர்பார்ப்புடன் உள்ளனர் என விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்திக்கான இராஜாங்க செயலாளர் சானக தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றால் வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களில் சுமார் 50 ஆயிரம் பேர் இதுவரை நாடு திரும்பியுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், வெளிநாடுகளில் தங்கியுள்ளவர்களை விரைவாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய கட்டம் கட்டமாக அவர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையர்கள் தற்போது நாட்டுக்கு அழைத்து வரப்படுகின்றனர் என்றும் ஏனைய நாடுகளில் உள்ளவர்களையும் சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைய நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## மரித்துப் போன மனித உரிமைகள்

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்.

மானுட சமூகம் – மனித சமுதாயம் – தனது வாழ்வுலகின் சகோதரர்களாகிய ஒவ்வொரு மனிதன் குறித்தும் சிந்தித்து, அவனை மதிப்பார்ந்த நோக்கில் பார்த்து, மனிதத்துவத்தைப் பேணி, அதன் மாண்பைத் தக்க வைப்பதற்குரிய விடயங்களை வலியுறுத்துவதற்குக் குறித்தொதுக்கிய விசேட தினம் இது.

மனிதர்கள் ஆறறிவு படைத்த மனிதர்களாக – இந்தப் பூமிப் பந்தின் மேன்மக்களாக பிறந்தமையால் அவர்களுக்குக் கிடைத்த – அடிப்படையான – விட்டுக் கொடுக்க முடியாத – மறுக்க வொண்ணாத – உரிமைகள் குறித்து குறிப்பாகச் சிந்திக்கின்ற நாள் இது.

இந்தப் பூவுலகில் ஆறாவது அறிவோடு உயிர்த்தவன் மனிதனே. அந்த ஆறாவது அறிவு போதித்த நற்பண்பியல்புகளைப் பேணி, மக்கள் மாக்களாக அல்லாமல், மனிதச் சிறப்பியல்புகளோடு இந்த மாநிலத்தில் வாழ்வதாயின் அவன் சக மனிதனை மதிக்கின்றமையும், வாழ்க்கையில் தனது சகோதர மனிதனுக்குரிய உரிமைகளைப் பேணுகின்றமையும் கடப்பாடானவை என்பதை மனிதன் உணர்ந்தவன். தன்னுடைய சமூகம் – மனித சமுதாயம் – குழப்பமின்றி அமைதியாகவும், மாண்போடும் வாழ்வதாயின், காலங்காலமாக சிறப்போடு இம்மாநிலத்தில் நிலைபெறுவதாயின், மற்றவர்களையும் மதிக்கும் ஒழுக்கக் கட்டுப்பாட்டைத்தான் தவறாது பேண வேண்டும் என்ற சிந்தனைத் தெளிவு – அறிவு முதிர்வு – மனிதனுக்குக் கிட்டியது.

அதன் விளைவாக வகுக்கப்பட்டவையே மனித உரிமைகள்.

ஒவ்வொரு மனிதனும் தன் சக மனிதனுக்குரிய அடிப்படை மனித உரிமைகளைத் தவறாது மதித்துப் பேணுவதாயின் இந்தப் பூவுலகு பூலோக சொர்க்கமாகும். அமைதிப் பூங்காவாகும். சமாதான சமதர்ம பூமியாகும் என்பதை மனிதத்துவம் உய்த்துணர்ந்தது.

அதன் பெறுபேறே மனித உரிமைகள் என வகுக்கப்பட்ட பட்டயம். மனித சமுதாயத்தின் விழிப்புணர்வின் வெளிப்பாடுதான் சர்வதேச மனித உரிமைப் பிரகடனமும் அதை முழுஅளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உலக சமுதாயத்தின் ஒன்றுபட்ட அழுத்தமான தீர்மானமாகும்.

இரண்டாம் உலகப் போரை அடுத்து 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பு உருவாக்கப்பட்டது. அதை அடுத்து, அடுத்த ஆண்டிலேயே 'சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு' உருவாக்கம் பெற்றது.

அச்சமயத்தில் ஆக ஐம்பத்துமூன்று நாடுகளை மட்டுமே உறுப்புரிமையாகக் கொண்டிருந்த சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு, 'சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை' உருவாக்குவதற்கான குழுவை நியமித்தது.

அந்தக் குழுவினால் முப்பது பிரிவுகளைக் கொண்ட இந்த 'சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்' தயாரிக்கப்பட்டது.

1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையின் விசேட கூட்டத்தில் – அப்போது அதில் அங்கம் வகித்த 58 நாடுகளின் ஒப்புதலுடன் – இந்த மனித உரிமைகள் பிரகடனம் அங்கீகரிக்கப்பட்டது.

அந்தப் பிரகடனம் அங்கீகரிக்கப்பட்ட தினத்தை 'சர்வதேச மனித உரிமைகள் தினம்' ஆகக் கொண்டாடுவது என்ற ஏற்பாடு 1950 இல் முடிவு செய்யப்பட்டது.

ஓர் அழிவிலிருந்துதான் மற்றொன்று உருவாக்கப்படும் என்பார்கள். மனித உரிமையைப் பேண வேண்டும் என்ற விழிப்புணர்வு கூட அது போன்ற ஓர் அழிவில் இருந்துதான் உற்பவித்தது என்பது கவனிக்கத்தக்கது. இரண்டாம் உலகப்போர் என்ற உலகப் பேரழிவில் கிட்டிய கசப்பான – கொடூரமான – துன்பியல் ரீதியான – மோசமான – பட்டறிவே, சர்வதேச மனித உரிமை சாசனம் என்ற சர்வதேசக் கோட்பாட்டை சர்வதேசப் பட்டயமாகத் தயாரித்து, வரைந்து, அதனை சர்வதேச ரீதியில் நடைமுறைப்படுத்த வேண்டிய சிந்தனைத் தெளிவை – அறிவுணர்வை – உலகுக்கு ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த சர்வதேச மனித உரிமைகள் சாசனமே இன்றளவில் உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணம் என்று கின்னஸ் புத்தகப் பதிவு கூறுகின்றது. அவ்வளவு தூரம் மனித வாழ்வுடன், மனித விழுமியங்களுடன், மனித மாண்புகளுடன் நெருக்கமான அடிப்படைகளைக் கொண்டதாக அது விளங்குகின்றது.

இரண்டாம் உலகப் போரின் கொடூரப் பட்டறிவிலிருந்துதான் மனித உரிமைகள் பற்றிய இந்தப் பட்டயம் எழுந்தது. உலக மாந்தரின் மன எண்ணவோட்டத்தில் மனித குல மாண்பு பற்றிய தீர்க்கதரிசனம் – விழிப்புணர்வு – ஏற்பட்டது.

ஆனால், நமது இலங்கையைப் பொறுத்தவரை நம் இலங்கைத் தீவை பெரும் கொடூரத்துக்குள்ளும் பேரழிவுகள் மற்றும் போரழிவுக்குள்ளும் தள்ளிய மூன்று தசாப்த கால குரூரப் போரின் முடிவின் பின்னரும் – ஒரு தசாப்தம் கடந்தும் – மனித சமூக மாண்பு பற்றிய உயர்ந்த சிந்தனை இங்கு தோன்றவேயில்லை. அதனால்தான் இங்கு – இன்றும் – மனித உரிமைகள் மிதிக்கப்படும் குரூரம் பேரினவாதப் பெருமையாகத் தொடர்கின்றது.

# மன்னார் இளைஞர், யுவதிகளுக்கு காற்றாலை மூலம் வேலைவாய்ப்பு!

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்



மன்னாரில் உருவாக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், வீதிகள் புனரமைப்பு மற்றும் குழாய் கிணறுகளை அமைத்துக் கொள்ளுதல் போன்ற வாய்ப்புகளும் மன்னார் மக்களுக்குக் கிடைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் நீர் மற்றும் எரிபொருள் மூலம் மின் உற்பத்தி செய்யப்பட்டுவந்த நிலையில், தற்போது சுற்றாடல் பாதிப்புக்கள் அற்ற குறைந்த செலவிலான காற்றாலை மின் உற்பத்தியில் அரசாங்கம் ஆர்வம் செலுத்தி வருகின்றது. இதன்படியே மன்னாரில் காற்றாலை உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுவதன் ஊடாக பிரதேச அபிவிருத்தி விரைவு படுத்தப்படுவதுடன் உட்கட்டமைப்பு வசதிகளும் விருத்தி செய்வதற்கான சூழல் ஏற்படுகின்றது.

இதேபோன்று, மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்கின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு காணப்படும். அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான் மற்றும் கு.திலீபன் ஆகியோரின் ஊடாக இந்த வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

தற்போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக வருடாந்தம் சுமார் 400 மில்லியன் மின் அலகுகளை உற்பத்தி செய்ய முடியும். இந்த உற்பத்தியின் மூலம் சுமார் 10 நாள்களுக்கு தங்குதடையின்றி நாடு முழுதும் மின்சாரம் வழங்க முடியும்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 2021 முதலாவது நாடாளுமன்ற அமர்வு ஜனவரி 05 ஆம் திகதி!

2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வை ஜனவரி 05 ஆம் திகதி நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்று கூடியபோது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் அடுத்த வருடத்தின் முதலாவது அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும் விடயம் என்ன என்பது தொடர்பில் மீண்டும் ஒருமுறை நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு கூடி முடிவெடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்த கூட்டத்தில் அரசாங்க நிதி பற்றிய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய 18 ஆகக் காணப்படும் இந்தக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரிக்கப்படவிருப்பதுடன், ஆளும் கட்சி சார்பில் ஓர் உறுப்பினரும் எதிர்க்கட்சியின் சார்பில் இரண்டு உறுப்பினர்களும் உள்வாங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆராய மற்றுமொரு குழு நியமிப்பு!

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணைகணை மேற்கொள்ள மேலுமொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர உள்ளிட்ட மேலும் சிலர் நேற்றையதினம் சட்டமா அதிபரை சந்தித்தனர்.

அந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சரத் வீரசேகர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

12 சட்டத்தரணிகள் அடங்கிய குறித்த குழு சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் சிக்கிய பலர் தாய் நாடு வந்தடைந்தார்கள்!

கொழும்பு, டிசெ.10

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் பலர் நாடு திரும்பியுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் தங்கியிருந்த மேலும் 655 இலங்கையர்களே நேற்று (புதன்கிழமை) காலை நாடு திரும்பினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சவூதி அரேபியாவில் இருந்து 293 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 193 பேரும் கட்டாரில் இருந்து 111 பேரும் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்களை தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


**பால்நிலை வன்முறைக்கு எதிரான**
**16 நாள் செயற்பாடு - 2020**
**16 Days of Activism Against Gender Based Violence**

**பெண்களை தூற்றாதீர்கள். அவர்கள் கருத்து சொல்வதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள். அவளும் குடும்ப நலனுக்காக தன்னையும் அர்ப்பணித்து நிற்கிறாள்.**

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

# ஒரு லட்சம் பேருக்கு அரச தொழில் திட்டம்: 38ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டு விட்டது!

## என்கிறார் கெஹலிய ரம்புக்வெல

ஒரு லட்சம் பேருக்கு அரச தொழில்களை வழங்கும் கொள்கைத் திட்டத்துக்கு அமைய இதுவரையில் 38 ஆயிரம் பேருக்கு தொழில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மிகுதியாகவுள்ள 62 ஆயிரம் பேருக்கு விரைவில் தொழில் நியமனம் வழங்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்:-



கல்வித் தகைமையில்லாத இளைஞர், யுவதிகள் ஒரு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் திட்டம் அரசாங்கத்தின் 'சுபீட்சமான கொள்கை' திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

கல்வி தகைமையில்லாதவர்கள் தவறான வழியில் செல்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவே ஒரு லட்சம் பேருக்கு அரச தொழில்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கை நாடுதழுவிய ரீதியில், கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. கிராம சேவகர், இராணுவத்தினர் ஊடாக கடந்த காலங்களில் நேர்முக பரீட்சை பல பிரதேசங்களில் இடம்பெற்றன.

இதனடிப்படையில் இதுவரையில் 38 ஆயிரம் பேருக்கு தொழில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக ஒரு லட்சம் பேருக்கு தொழில்வாய்ப்பு என்ற இலக்கை அடைய முடியவில்லை.

68 ஆயிரம் பேருக்கு தொழில் நியமனம் விரைவில் வழங்கப்படும். அரசியல் காரணிகளை கொண்டு இவ்வாறு தொழில் நியமனம் வழங்கப்படவில்லை.

கல்வி தகைமையில்லாதவர்களும் அரச சேவையில் ஈடுபட வேண்டும். நியமனம் வழங்கப்படும் ஒரு லட்சம் பேருக்கும் அரச சலுகைகள் முழுமையாக வழங்கப்படும். - என்றார்.

## மஹர சிறைச்சாலை களேபரம்:

# நிபுணர்குழு முன்னிலையில் 11 பிரேத பரிசோதனைகள்

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட களேபரத்தின் போது உயிரிழந்த கைதிகளின் பிரேத பரிசோதனையை நிபுணர் குழாம் முன்னிலையில் மேற்கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களமும் பாதிக்கப்பட்டோர் தரப்பினரும் வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

கடந்த 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட களேபரத்தின் போது உயிரிழந்த 11 கைதிகளின் பிரேத பரிசோதனையை மூன்று சட்ட வைத்திய அதிகாரிகள், அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் துப்பாக்கிகள் தொடர்பான நிபுணர் ஒருவர், தடயவியல் ஆய்வு நிலையத்தின் வைத்தியர் ஒருவர் உள்ளிட்ட நிபுணர் குழாம் முன்னிலையில் மேற்கொள்ள இதன்போது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்த நிபுணர்களின் பெயர் பட்டியலை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு வத்தளை நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல சட்ட மாஅதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நாளை 11 ஆம் திகதியே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்தது.

எனினும், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதியான, சட்ட மா அதிபரின் ஊடக இணைப்பு அதிகாரியான நிஷாரா ஜயரத்ன தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கு அமைய இந்தவழக்குவிசாரணை இடம்பெற்றது.

இதன்போது அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன மற்றும் சிறைக் கைதிகளின் உரிமைகள் தொடர்பிலான குழுவினரின் சட்டத்தரணிகள் மன்றில் வாதப் பிரதிவாதங்களை முன்வைத்திருந்தனர்.

# நுவரெலியாவில் மேலும் 9 பேருக்கு கொரோனா!

நுவரெலியா மாவட்டத்தில் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் மேலும் 9 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அக்கரப்பத்தனை பகுதிகளில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மூலம் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றாளர் ஒருவருடன் தொடர்பில் இருந்த தந்தை, தாய் மற்றும் மகள் ஆகியோருக்கே இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி, அக்கரப்பத்தனை தோட்டப்பகுதியில் அறுவருக்கும், கிரேட் வெஸ்டன் தோட்டத்தில் ஒருவருக்கும், லிந்துலை தோட்டத்தில் இருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மூலம் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களும், குடும்ப உறுப்பினர்களும் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் கொரோனா வைரஸ் தொற்று சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படவுள்ளனர்.

தீபாவளி பண்டிகைக்காக உறவினர்கள் வீடுகளுக்கு சென்றவர்களுக்கும், மரண வீடுகளுக்கு சென்றவர்களுக்குமே இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது.

# பொலிஸ் தலைமையகத்தில் 150 பேருக்குத் தொற்றா? செய்தியை நிராகரித்தார் ஊடகப் பேச்சாளர் ரோஹண

பொலிஸ் தலைமையகத்தில் 150 பொலிஸார் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என வெளியான செய்தியை பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊட கப் பேச்சாளருமான அஜித் ரோஹண மறுத்துள்ளார்.

அத்துடன் பொலிஸ் தலைமையத்தில் இதுவரை மூன்று பொலிஸ் அதிகாரிகள் மாத்திரம் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



பொலிஸ் தலைமையகத்துடன் இணைக்கப்பட்ட 150 அதிகாரிகள் கொரோனா வைரஸ் சோதனையில் சாதகமாகக் காணப்பட்டனர் எனத் தெரிவித்து ஒரு தினசரியின் முதல் பக்கத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தவறானது என்று மறுத்த அஜித் றோஹண, பொலிஸ் புள்ளி விவரங்களின்படி, தலைமையகத்தில் மூன்று அதிகாரிகள் மட்டுமே கொவிட்டுக்கு நேர்மறை சோதனை செய்துள்ளனர்.

தற்போது இந்த மூன்று பொலிஸ் அதிகாரிகளும் பொலிஸ் கொவிட் - 19 சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

# கொரோனா உயிரிழப்பு சடலங்களை பொறுப்பேற்க மறுக்கும் உறவினர்கள்!

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வரை, கொவிட் தொற்றால் உயிரிழந்த 19 பேரின் சடலங்கள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன என சுகாதார தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

பல நாள்களாக இந்த சடலங்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டும் சுகாதார தரப்பு, இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் உரிய தீர்வை வழங்கவில்லை எனவும் தெரிவிக்கின்றது.

இந் நிலையில் உறவினர்கள் பொறுப்பேற்க மறுக்கும் கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்கள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் இறுதி முடிவெடுக்க முடியாத நிலையில் இருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

# மருந்துக்காக மக்கள் குவிந்தமை ஆபத்தே!

## இராஜாங்க அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு

கொரோனாவை குணப்படுத்தும் மருந்து என அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்ட மருந்தைப் பெறுவதற்காக ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் குழுமியமையால் கேகாலைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

முழு கேகாலைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ள அவர், கொரோனா விதிமுறைகள் மீறப்பட்டிருக்கின்றமையால் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மிகப்பெரிய ஆபத்தான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இந்த மருந்து கொரோனாவை குணப்படுத்தக்கூடியது என்



பது இன்னமும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சோதனைகள், ஆய்வுகள் இடம்பெறுகின்றன என்றும் இந்த மருந்து கொரோனாவை குணப்படுத்தக்கூடியது என்பது நிரூபிக்கப்பட்டால் தாம் பொதுமக்களுக்கு அறிவிப்போம் என்றும் அதுவரை பொதுமக்கள் பொறுமையாக இருக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸிற்கான எந்த மருந்தும் விஞ்ஞான ரீதியிலான ஆய்விற்கு உட்படுத்தப்படவேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இந்த மருந்து இன்னமும் ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை, ஆகவே மக்கள் மருந்துகளை பயன்படுத்துவதற்கு முன்னர் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் இந்த நெருக்கடியான தருணத்தில் எச்சரிக்கையுடன் செயற்படாவிட்டால் அதனால் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கட்டமைக்கப்பட்ட இனவாதமே சித்தாந்தமாகக் கட்டவிழ்கிறது

**நாடாளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீடு சம்பந்தமான வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் விவரம் இங்கு பிரசுரமாகின்றது.**

நீதியே இந்த நாட்டின் எல்லா மக்களினதும் இன்றைய எதிர்பார்ப்பாகும். நீதியானது தவிர்க்க முடியாத வகையில், தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வுடனும் எதிர்காலத்துடனும் பிணைந்துள்ளது.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் கொடூரமாகவும் இரக்கம் இன்றியும் கொலைசெய்யப்பட்ட அப்பாவி மக்களுக்கான நீதியை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களுக்கான நீதியை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழ் அரசியல் கைதிகள் நீண்டகாலமாக தமக்கான நீதியை எதிர்பார்க்கிறார்கள். தமது சமூகத்தை சார்ந்த ஒருவர் நீதிக்கு அமைச்சராக இருக்கின்றபோதிலும் முஸ்லிம்கள் தமது ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான நீதியை எதிர்பார்க்கிறார்கள். 2010 ஏப்பிரல் 21 ஆம் திகதி குண்டு வெடிப்புக்களில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதியை கத்தோலிக்க மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நீதியும் சமாதானமும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. உடல், உள, புத்தி ரீதியாகவும் தாற்காலிகமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமாதானத்தை அடைவதற்கான முதல் படி அவர்களுக்கு நீதியை பெற்றுக்கொள்வதாகும். இந்த சந்தர்ப்பத்தில் 1972 ஆம் ஆண்டு 6 ஆவது போப்பாண்டவர் போல் உலக சமாதான தினம் அன்று கூறிய ஒரு பிரபல்யமான கூற்றை இங்கு கூறுவது பொருத்தமானது.

மனிதனுக்கான உண்மையான மரியாதையின் நிமித்தம் காரணமாக அமையாத சமாதானம் உண்மையான சமாதானம் அல்ல. மனிதனுக்கான நேர்மையான இந்த உணர்வை நாம் எப்படி அழைக்கின்றோம் ? இதை நாம் 'நீதி' என்று அழைக்கின்றோம். உனக்கு சமாதானம் வேண்டுமானால், நீதிக்காக உழை என்று அவர் கூறினார்.

இன்றைய அரசாங்கம் சமாதானத்தை அடைவதற்கும் அதனால் நீதிக்காக உழைப்பதற்கும் தயாராக இருக்கிறதா?

இலங்கைக்குள் உங்களின் சக பிரஜைகளான சுதேச தமிழ் மக்களின் துன்பங்கள், துயரங்கள், பிரச்சினைகள் பற்றி உங்களுக்கு உண்மையான கரிசனை உணர்வு இருக்குமானால் அவர்களின் நிலங்களை அபகரிக்க மாட்டீர்கள். எமது கலாசார சின்னங்களை அழிக்க மாட்டீர்கள். தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு கிழக்கில் பெரும் எண்ணிக்கையான சிங்கள இராணுவத்தை வைத்திருக்கமாட்டீர்கள். பாதிக்கப்பட்டவர்கள் மீதும் நலிந்தவர்கள் மீதும் உணர்வு இருக்குமானால் அவர்களிடம் இருந்து அபகரிக்கமாட்டீர்கள். மாறாக, அவர்களுக்குக் கொடுத்து உதவிசெய்து ஆறுதல் கூறுவீர்கள். ஆனால், நீங்கள் எமது நிலங்கள், எமது பாரம்பரிய வாழ்வு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை இல்லாமல் செய்வதில் அக்கறை கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எம்மை சக மனிதர்களாக அன்றி தோற்கடிக்கப்பட்ட மக்களாகவே இந்த தீவில் எம்மை தொடர்ந்து நடத்துகிறீர்கள். நாங்கள் எவரும் தோற்கடிக்கப்படவில்லை. எமது இதயங்களில் இன்னமும் நாம் சுதந்திரத்துக்கான தீபத்தை ஏந்திக்கொண்டிருக்கிறோம்.

அப்பாவிகள் பக்கமாக அன்றி தவறிழைப்பவர்கள் பக்கமாகவே இந்த நாட்டில் நாம் செயற்படுவதை நீதி தொடர்பாக பேசுகின்றபோது நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1956, 1958,1961,1977,1981 மற்றும் 1983 ஆண்டு இனக்கலவரங்களின்போது கொலைகள், சித்திரவதைகள், தீவைப்பு மற்றும் பாலியல்வல்லுறவுகளில் ஈடுபட்ட ஒருவரையேனும் நாம் தண்டித்திருக்கிறோமா? 97,000 நூல்களையும் ஓலைச்சுவடிகளையும் கொண்டிருந்த யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமைக்கு ஒருவரையாவது தண்டித்திருக்கிறோமா? அப்போது தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகச்சிறந்த நூலகமாக அது திகழ்ந்தது. அண்மைக்காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபட்ட எவரையாவது தண்டித்திருக்கிறோமா? ஆகக்குறைந்தது இந்த விடயங்களில் பொறுப்புக்கூறலுக்காவது முயற்சித்திருக்கிறோமா? தொடர்ந்து வந்த அரசாங்கங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை அமுல்படுத்தி இருக்கிறோமா? இவை எல்லாமே வசதியாக தட்டுக்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு தமிழர் அமைச்சர்களாக இருக்கின்றபோதிலும் அதிகாரம் பெரும்பான்மை சமூகத்தின் கைகளிலேயே இருக்கிறது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் எமக்கு எது நல்லது என்பதை அவர்களே தீர்மானிக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்த நாள் முதல் இதுதான் நிலைமை. அனைவருக்குமான நீதி (inclusive justice) என்பது இந்த நாட்டில் இல்லை. பக்கச்சார்பான நீதியே (selective justice) காணப்படுகின்றது. சிங்கள பௌத்த மக்களின் நல்வாழ்வுக்காக 'நீதி' தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

இங்கு ஒரு புதுமையான அரசியல் கலாசாரம் வளர்க்கப்படுகின்றது. எண்ணிக்கை அடிப்படையில் சிறுபான்மை மக்களுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவர் கூடுதலான குற்றங்களையும் துன்பங்களையும் செய்கிறாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அவருக்கு வெகுமதிகளும் பதவி உயர்வுகளும் கொடுக்கப்படுகின்றன. இதன் தாக்கத்தை இந்த சபையிலும் உணர முடிகின்றது. அதனால்தான் படித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் – தமிழ்,முஸ்லிம் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சமுகம் பற்றியும் அரசாங்கம் பற்றியும் உண்மைகளைப் பேசும் போது கூச்சல் போட்டு குழப்புகிறார்கள்.

இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராக காணப்படுவது கட்டமைக்கப்பட்ட ஓர் இனவாதமாகும் (Systemic Racism). அரச நிறுவனங்களின் செயற்பாடுகளின் ஊடாக இது முன்னெடுக்கப்படுகின்றது. இந்த இனவாதம் என்பது ஒரு சித்தாந்தம் (Ideology) ஆகியுள்ளது. இந்த சபையில் முறைகேடாக நடக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த சித்தாந்தத்தை காவுகிறார்கள். இனவாதத்தை விதைக்கும் கருவிகளாக ஊடகங்களும் மாறிவிட்டன. இந்த இனவாதம் எம்மை எங்கேயும் கொண்டுசெல்லப்போவதில்லை. இது இந்த நாட்டின் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் பெரும் குந்தகத்தையும் ஒட்டுமொத்த நாட்டுக்கும் பேரழிவையும் ஏற்படுத்தப்போகின்றது.

இன்றைய விவாதம் நீதி அமைச்சு பற்றியது என்பதால், நீதி அமைச்சின் இணையதளத்துக்கு சென்று

## நாடாளுமன்றில் விக்கினேஸ்வரன் சாட்டையடி

பார்த்தேன். அதில் "பூகோள முன்னேற்றங்கள் மற்றும் மக்களின் அபிலாசைகளுக்கு அமைவாக சமூகங்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் சட்ட மறுசீரமைப்பு செய்தல் இந்த அமைச்சின் நோக்கம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாங்கள் இந்த நோக்கத்தை முன்னெடுக்கிறோமா ? இந்த நாட்டில் நீதியுடன் சம்பந்தமான எல்லா விடயங்களுமே உலக நடப்புக்கள், உலக நியதிகள், ஒழுக்க எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றில் இருந்து முரண்பட்டு செல்வதே யதார்த்தமாக இருக்கிறது. தனி மனித உரிமைகள், சமூகங்களின் கூட்டு உரிமைகள், நல்லிணக்கம், சமாதானம், சகவாழ்வு போன்ற பண்புகளை முன்னிலைப்படுத்தி நாகரிகத்தின் வளர்ச்சிப்பாதையில் எவ்வாறு முன்னேறிச்செல்லலாம் என்று சிந்தித்து அவற்றுக்கு ஏற்ப தமது நாடாளுமன்றங்களில் சட்டங்களை இயற்றி உலக நாடுகள் பயணம் செய்கையில் இந்த பண்புகளுக்கு முரணாக அல்லவா இந்த நாடு பயணம் செய்கின்றது? குறிப்பிட்ட ஒரு சமுகத்தை சார்ந்த மக்களின் நிலங்களை பறிப்பதுடன் அவர்களின் கலாசாரம், பாரம்பரியம் மற்றும் வாழ்க்கை முறைகளை இல்லாமல் செய்வதற்கு முயலுகின்றது. சிங்கள பௌத்த தொல்பொருள் எச்சங்களை பாதுகாப்பது என்ற போர்வையில் எமது சமூகத்தின் நிலங்களை அபகரிக்கும் நோக்குடன் அவசர அவசரமாக விசேட ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. பௌத்த எச்சங்கள் இருக்கின்றன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், அந்த புராதன எச்சங்கள் தமிழ், பௌத்த காலத்தில் இருந்தானவை. சிங்கள மொழி பிறப்பதற்கு முன்னரேயே தமிழ் மக்கள் பௌத்தத்தை தழுவியிருந்தனர். தமிழ் பௌத்தர்கள் காலத்தில் இருந்தான எச்சங்களை நீங்கள் பேணிப் பாதுகாக்க விரும்பினால் இந்த ஆணைக்குழுக்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ் ஆணையாளர்களாகவே இருக்க வேண்டும். தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து சிங்கள மக்களுக்கு கொடுக்கவா முயலுகிறீர்கள்? இதுவா இந்த ஆணைக்குழுக்களின் நோக்கம்? 3,000 ஆண்டுகளாக தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இணக்கம் மற்றும் இசைவு இன்றி எந்த ஒரு செயற்பாடும் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படக்கூடாது.

சிங்கள மக்களுக்கு எதிராகவோ அல்லது அவர்களின் இறைமைக்கு எதிராகவோ எமது இளையோர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. அதேநாட்டில் தமது பகுதிகளின் இறைமைக்கு ஆபத்து ஏற்பட்டதாலேயே அவர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். அவர்கள் தமது அடையாளத்தை பாதுகாக்க வேண்டியிருந்தது. ஆனால், அவர்கள் பயங்கரவாதிகளாக அழைக்கப்பட்டு இருபதுக்கும் அதிகமான நாடுகளின் உதவியுடன் கொடூரமாக அழிக்கப்பட்டார்கள்.

ஒன்றைத் தெளிவாக புரிந்துகொள்ளுங்கள். நாட்டின் இறைமையை விட மக்களின் இறைமையே மேலானது. இன்றைய சர்வதேச உறவில் அப்படித்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில்தான் சர்வதேச சட்டங்களும் கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டுவருகின்றன. நாட்டின் இறைமையின் பின்னால் ஒளிந்து நின்றுகொண்டு, எமது மக்களின் இறைமையை இல்லாமல் செய்யலாம் என்று கனவு காணாதீர்கள். 18 ஆம் நூற்றாண்டு காலத்துக்குரிய நாட்டின் இறைமையை பாதுகாக்கும் கோட்பாடு இன்று பொருத்தம் அற்றதாகி வலுவிழந்துவிட்டது. ஒரு நாட்டின் மனித உரிமைகள் மோசமாக மீறப்படும்போது மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக அந்த நாட்டின் இறைமையை உதாசீனம் செய்யலாம் என்பதே இன்றைய உலக நடப்பு என்பதை புரிந்துகொள்



ளுங்கள்.

இறுதிப் போரில் மனிதக் கேடயங்களாக அப்பாவி மக்களை விடுதலைப்புலிகள் பயன்படுத்தியதாகவும், அந்த மக்களை நீங்கள் மீட்டதாகவும், எந்த ஒரு போர்க்குற்றத்தையும் படையினர் செய்யவில்லை என்றும் கூறுகிறீர்கள். இது உண்மையானால், இதை நீங்கள் கூறவேண்டியதில்லை. பாதிக்கப்பட்ட மக்கள்தான் கூறவேண்டும். ஆனால், இறுதி யுத்தத்தில் நீங்கள் காப்பாற்றியதாக கூறும் மக்கள் நீங்கள் தமது உறவுகளை கொலை செய்ததாக அல்லவா கூறுகிறார்கள்? நீங்கள் அந்த மக்களை உண்மையாக மீட்டு அவர்களுக்கு வாழ்வு அளித்திருந்தால், 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பின் வந்த சகல தேர்தல்களிலும் உங்களையல்லவா அவர்கள் ஆதரித்திருந்திருப்பார்கள்? ஆனால், தங்களை மனித கேடயங்களாக பயன்படுத்தியதாக நீங்கள் கூறும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் என்று நீங்கள் இன்றும் கூறும் தமிழ் தேசிய கூட்டமைப்பை அல்லவா மக்கள் தேர்தல்களில் பல தடவைகள் வெல்ல வைத்துள்ளார்கள்? எவ்வாறு 2013 ஆம் ஆண்டு முதன்முதலாக நடைபெற்ற வட மாகாணசபை தேர்தலில் வட மாகாணத்தின் ஆகக்கூடுதல் சாதனை வாக்குகளாக 133,000 வாக்குகளை மக்கள் எனக்கு அளித்தனர்?

விடுதலைப்புலிகள் மக்களை மனித கேடயங்களாக பயன்படுத்தினார்கள் என்றும், படையினர் மக்களை பாதுகாத்தார்கள் என்றும் நீங்கள் சொல்வது உண்மையானால் ஏன் சர்வதேச சுயாதீன விசாரணைக்கு தயங்குகிறீர்கள்? நீங்கள் சொல்வது உண்மையானால் சர்வதேச விசாரணை மூலம் அது நிரூபிக்கப்பட்டு உங்கள் மீதான விமர்சனங்கள் களையப்படவேண்டும். நீங்கள் அப்போது உங்கள் சர்வதேச அரங்கில் உங்கள் தலையை நிமிர்த்திக்கொண்டு வலம்வரமுடியும்.

ஆனால் உண்மை மாறாக இருக்கிறது. அதனால்தான் சர்வதேச விசாரணையை முகம்கொடுக்க நீங்கள் அஞ்சுகிறீர்கள். நீங்கள் சர்வதேச விசாரணைக்கு அஞ்சுவதும் சீனாவின் பின்னால் ஓடுவதும் உங்கள் படையினர் போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலையை இழைத்திருக்கிறார்கள் என்பதையே காட்டுகின்றது.

அடுத்த வருடம் மார்ச் மாதம், நாம் ஐ. நா மனித உரிமைகள் சபையை எதிர்கொள்கின்றோம். சர்வதேச சமுகத்தின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. மார்ச் மாத நடுப்பகுதி தொலைவில் இல்லை என்பதை குறித்து வைத் துக்கொள்ளுங்கள். தப்புவதற்கு சிறிய சந்தர்ப்பமே உள் ளது.

ஆனால் ஒரு வழி உண்டு. அரசாங்கம் புதிய அரசமைப்பை கொண்டு வருகின்றது. இந்த நாட்டின் எல்லா சமூகங்களும் சமத்துவம், ஒற்றுமை, சுதந்திரம், ஒத்துழைப்பு ஆகியவற்றுடன் வாழும் வகையில் ஒரு சமஷ்டி அல்லது அரை சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி அரசமைப்பைத் தயாரித்து நிறைவேற்றுங்கள். உங்கள் அரசாங்கம் மட்டுமே இதை செய்ய முடியும். பெரும்பான்மை சமூகத்துடன் சமத்துவம் மற்றும் சக வாழ்வுடன் வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்களும் கூட வாழும்வகையில் உண்மையான அதிகார பகிர்வை ராஜபக்ஷ குடும்பம் உறுதிசெய்யட்டும்.

நீங்கள் தவறினால், யுத்தம் நடைபெற்றபோது பேச்சுவார்த்தைகளுக்காக நாடுகளின் தலை நகரங்களுக்கு ஏறி இறங்கியதுபோல மீண்டும் ஏறி இறங்குவீர்கள். இந்த நாட்டில் இந்த முரண்பாடுகளை மேலும் கூர்மையாக்கி சர்வதேச வல்லரசுகள் காலூன்றுவதற்கு (இதுவரை அப்படி செய்திருக்கவில்லை என்றால்) இடமளிக்காதீர்கள் என்று இந்த அரசாங்கத்திடம் வேண்டிக்கொள்கின்றேன்.

# 2025 ஆம் ஆண்டு அனைவருக்கும் குடிதண்ணீர் வழங்குவதே இலக்கு!



## வாசுதேவ நாணயக்கார உறுதி

2025 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் குடி தண்ணீரை வழங்குவதே எமது இலக்காகும். அதனை அடைவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நீர்வழங்கல் அமைச்சின் 2021 ஆம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்களின் முன்னேற்றத்தை ஆராயும் மீளாய்வு கூட்டம் நீர்வழங்கல் அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

மக்களின் தேவைக்கேற்ப தடையின்றிய நீர் வழங்கல் மற்றும் புதிய நீர் இணைப்புக்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்காக செலுத்தப்படவிருந்த நிலுவைத் தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன், கடந்த சில மாதங்களில் மட்டும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஒப்பந்தக்காரர்களுக்கு 3 கோடியே 50 லட்சம் ரூபா செலுத்தி இருக்கின்றது.

எமது திட்டங்களில் உள்ளூர் திறன்களை இணைத்து உள்ளூர் ஒப்பந்தக்காரர்களை இணைத்துக்கொள்வதே எமது நோக்கமாகும். உரிய தரத்தைப் பூர்த்தி செய்து உயர்தர சேவையை வழங்கும் ஒப்பந்தகாரர்களை நாங்கள் எப்போதும் பாதுகாக்கிறோம், எமது கொடுப்பனவுகளில் ஏதேனும் தாமதங்கள் ஏற்பட்டு ஒப்பந்தகாரர்களை நஷ்டமடைய அனுமதிக்க மாட்டோம்.

எவ்வாறாயினும், எமது திட்டங்களைப் பணயக் கைதிகளாக வைத்திருக்க ஒப்பந்தக்காரர்களுக்கு இடமளிக்கமாட்டோம். அவர்களின் எந்தவொரு கோரிக்கைக்கும் செவிசாய்க்க நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நீரை வழங்குவதே எமது தேவையாகும். இதற்காக, இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட எமது அனைத்து அதிகாரிகளும் முழு அர்ப்பணிப்புடனும் உறுதியுடனும் பணியாற்றி வருகின்றமையுடன், 2025 இற்குள் அனைவருக்கும் குடிதண்ணீரை வழங்கும் எமது முதன்மை நோக்கத்தை அடைய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம் - என்றார்.

# ஹெரோயினுடன் சிக்கிய 18 வயது இளைஞன்!

பேலியகொட பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்த வீதி பகுதியில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த இளைஞர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

பேலியகொட பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவரிடமிருந்து 5 கிராம் 8 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபரான இளைஞன் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆரம்பப் பாடசாலைகளை ஒழுங்குபடுத்த நிபுணர்குழு!

தேசிய கொள்கை வகுக்கவும், நாட்டில் ஆரம்ப பாடசாலைகளை ஒழுங்குபடுத்தவும் நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த த சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இந்தக்குழு தொகுத்த அறிக்கை இந்த மாதம் 11 ஆம் திகதி கல்வி அமைச்சரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பீ.வை.ஜீ. ரத்னசேக்கர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்த அவர், ஆரம்ப பாடசாலை முறையை சீரமைக்க மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

கொவிட் - 19 நெருக்கடியால் 45 ஆயிரத்து 182 பேருக்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சில முன்பள்ளி ஆசிரியர்கள் பிற வேலை வாய்ப்புகளை நாடுகிறார்கள்.

எனவே முன்பள்ளி சேவையில் ஈடுபடுவோருக்கு மாற்று வழிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தை இராஜாங்க அமைச்சர் இதன்போது வலியுறுத்தினார்.

# பலாலி தனிமைப்படுத்தலிலிருந்து 89 பேர் வீடு திரும்பினார்கள்!

பலாலியில் உள்ள இலங்கை விமானப்படை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட 89 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை பூர்த்தி செய்த நிலையில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 37 ஆண்கள் மற்றும் 52 பெண்கள் அடங்கிய குழுவினர் மேலும் இரண்டு வாரங்களுக்கு தமது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் விமானப்படை தெரிவித்துள்ளது.

இத்தாலியிலிருந்து நாடு திரும்பிய நிலையில் இந்த அனைவரும் அங்கு தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிணற்று நீர் பருகும்போது அவதானம் தேவை யாழ். மக்களுக்கு சுகாதாரத்துறை எச்சரிக்கை!


யாழில் கடந்த வாரம் முதல் பெய்த கடும் மழை காரணமாக கிணற்று நீரைப் பருகும் போது அவதானமாக இருக்குமாறும், முடிந்தளவு கொதிக்க வைத்து ஆறிய நீரை பருகுமாறு சுகாதார துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மழை காரணமாக கிணறுகளின் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது. அத்துடன் கிணறுகளில் வெள்ள நீரும் கலந்து உள்ளன அவற்றை பருகுவதால், வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல் என்பன ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறும், கிணறுகளுக்கு குளோரின் இடுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

# கொரோனாவிலிருந்து 542 பேர் மீண்டனர்!

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 542 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (புதன்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 21 ஆயிரத்து 800 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதுவரையில் 29 ஆயிரத்து 378 ஆக பதிவாகியுள்ளது.

அவர்களில் 21 ஆயிரத்து 800 பேர் குணமடைந்துள்ள நிலையில் தொற்றுக்கு உள்ளான 7 ஆயிரத்து 436 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளான 142 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவி விலகினர்!

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிகளில் இருந்து தான் உள்ளிட்ட அனைவரும் விலகியுள்ளனர் என கல்வியமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

பதவி விலகல் கடிதங்களை கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் நிதியமைச்சின் செயலாளரிடம் கையளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இந்த ஆணைக்குழுவில் உறுப்பினராக இருந்த ஐவரும் இவ்வாறு பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவிலில் தனிக் கல்வி வலயம் அனுமதிக்க முடியாதென்கிறார் பீரிஸ்!

இலங்கை கல்விக் கொள்கையில் உபகல்விவலயங்களை உருவாக்குவதற்கு எவ்வித அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் பொத்துவில் பகுதிக்கு தனியான கல்வி வலயமொன்று உருவாக்கப்படாதென கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கல்வி அமைச்சரிடம், பொத்துவில் உப கல்வி வலயம், கல்வி வலயமாக தரமுயர்த்தப்படுமா என எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

உபகல்விவலயங்களை உருவாக்குவதற்காக இலங்கை கல்விக் கொள்கையில் எவ்வித அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்தக் கல்விக் கொள்கைகளை நாம் அனுமதிப்பதில்லை என்பதுடன், அதனை முற்றாக நிராகரிக்கிறோம்.

என்றாலும் கிழக்கு மாகாண சபையால் பொத்துவில் உப கல்வி வலயமொன்று நடத்தப்பட்டு செல்வதாக அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தேசிய மட்டத்தில் உப கல்வி வலயங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதால் குறித்த உப கல்வி வலயத்தில் பணிபுரியும் இரண்டு அதிகாரிகளும் இலங்கை நிர்வாக சேவைக்குள் அனுமதிக்கப்படவில்லை.

அதேபோன்று உப கல்வி வலயங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதால் அவ்வாறான உப கல்வி வலயங்களில் உள்ள அதிகாரிகளுக்கு அதிகாரமும் வழங்கப்படாது.

சிறிய தேவைகளுக்காக பொத்துவில் பகுதியில் உள்ளவர்கள் அக்கரைப்பற்றுக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால் புதிய கல்வி மறுசீரமைப்புக் கொள்கையில் புதிய தொழில்நுட்பங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. கல்வி முகாமைத்தும் மற்றும் நிர்வாக முறைகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் புதிய கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாக முறைகள் உருவாக்கப்படும். விரைவாக இந்த வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.



ஆகவே, பொத்துவில் பகுதிக்கு தனியான கல்வி வலயமொன்று உருவாக்கப்படாது. இனங்களை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்தில் கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறான கருத்திட்டங்களுக்கு அமைய கல்வி வலயங்கள் உருவாக்கப்படுவதற்கு கொள்கை ரீதியாக நாங்கள் இணங்க மாட்டோம். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் நீதித்துறையில் தமிழருக்கு நம்பிக்கையில்லை

## சர்வதேச விசாரணை கோர அதுவே காரணம் என்று நாடாளுமன்றில் இடித்துரைத்தார் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, டிசெ. 09

இலங்கையின் நீதிப் பொறிமுறையில் நம்பிக்கையிழந்த காரணத்தாலேயே, சர்வதேச விசாரணையைக் கேட்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கான நீதி நிலைநாட்டப்படுவதில் நீண்டகால இழுத்தடிப்புகள் காணப்படுகின்றன. இதனாலேயே மோசமான குற்றங்களுக்குநீதியைப்பெற்றுக்கொள்ள சர்வதேச நீதிமன்ற தலையீட்டைக் கொண்ட விசாரணைகளைக் கேட்கின்றோம்.

இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாக இல்லை என்பதை ஆட்சி செய்தவர்களும், ஆட்சி செய்கின்றவர்களும் முன்வைக்கும் விமர்சனங்களில் இருந்தே வெளியாகி விட்டன.

நாட்டில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. எமது மக்களின் பிரச்சினைகள் வேறு ஒரு கோணத்தில் இருந்தே பார்க்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் மேலெழுகின்றபோது, நீதி அமைச்சர் ருவிட்டர் மூலமாக கருத்துக்களைக் கூறுவதை மட்டுமே செய்து வருகின்றார். அதனை மாத்திரமே அவரால் செய்ய முடியும்.

சிறைச்சாலைகளில் 1983, 2000 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில், அரச பாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் குறித்த விசாரணைகள் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை. இந்தநிலையில், தற்போது மஹர சிறைச்சாலையிலும் படுகொலை அரங்கேற்றப்பட்டுள்ளது.

திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை, கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், சிவநேசன், ரவிராஜ் மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க போன்றோரின் படுகொலைகள், ஊடகவியலாளர் கீத்நோயர் கடத்தப்பட்டு கடுமையாக தாக்கப்பட்ட சம்பவம், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணமால் ஆக்கப்பட்ட சம்பவம், 34 தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகியவற்றுக்கு இன்னமும் நீதி நிலை நாட்டப்படாதது ஏன்?

நாட்டில் மோசமான, சர்வதேச குற்றங்கள் பல இடம்பெற்றுள்ள காரணத்தாலேயே சர்வதேச விசாரணைகளைக் கேட்கின்றோம். அதனை 'வேண்டாம்' எனக் கூற முடியாது - என்றார்.

# தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் மஹிந்தவுடன் தமிழ் எம்.பிக்கள் பேச்சு

## விடுதலை செய்யக் கோரும் கடிதமும் நேரில் கையளிப்பு



சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 80 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தமிழ் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து சிறையில் இருக்கும் 80 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியே குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன், எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் பிரதமரை இன்று சந்தித்திருந்தனர்.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி ஆர். சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன், சி.வி. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மனோ கணேசன், சிவஞானம் சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், வே.இராதாகிருஷ்ணன், இரா.சாணக்கியன், ஜனாகருணாகரன், த.சித்தார்த்தன் மற்றும் தவராசா கலையரசன் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதமும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

# கார் டயர் வெடித்து விபத்து இருவர் சாவு; மூவர் காயம்!

## நுணாவிலில் துயரம்



யாழ்., தென்மராட்சி, நுணாவில் ஏ - 9 வீதியில் வேகமாகச் சென்ற காரின் டயர் திடீரென வெடித்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் 11.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கிப் பயணித்த கார் டயர் திடீரென வெடித்ததில், திருத்த வேலைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் தாங்கி வாகனம் மீது மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் உட்பட ஐவர் காரில் பயணித்துள்ளனர். அவர்களில் 4 வயதுடைய சிறுவன், 35 வயதுடைய பெண் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். ஏனைய மூவரும் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# வடக்கிலும் தெற்கிலும் சிறைகளிலும் கொல்லப்பட்டவர்கள் எமது உறவுகளே

## அவர்கள் தேசத்தின் பிள்ளைகள் என்கிறார் மங்கள

கொழும்பு, டிசெ.09

தென்பகுதியில் கொல்லப்பட்ட சிங்களவர்கள், வடபகுதியில் கொல்லப்பட்ட தமிழர்கள், மஹர மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் கொல்லப்பட்ட கைதிகள் அனைவரும் எங்களின் உறவுகள் எங்கள் நாட்டின் பிள்ளைகள் என்பதை நாங்கள் மறக்க முடியாது.

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம், தீவிரவாதம் போன்ற குற்றச்செயலில் ஈடுபட்டவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட அனைவரையும் சட்டத்தின் கீழ் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள காணொளியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரு நாடு ஒரு சட்டம் என்பதை வெறும் வார்த்தைகளுக்கு அப்பால் சென்று உண்மையில் நடைமுறைப் படுத்துவது எப்படி என நாட்டை நேசிப்பவர்கள் சிந்திக்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

மஹர சிறைச்சாலை கலவரத்தின் பின்னர் சிறைச்சாலை வாசலில் தாய்மார்கள் கண்ணீர்விட்டு அழுதது தென்பகுதியில் கண்ணீர் விட்ட தாய்மார்களை நினைவுபடுத்தியது.

அதேவேளை, வடக்கின் தாய்மார்களின் கண்ணீரை மாத்திரமில்லை அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் கண்ணீரையும் நாங்கள் பார்த்துள்ளோம்.

இலங்கையில் படுகொலை செய்யப்படுபவர்கள் எங்கள் தேசத்தின் பிள்ளைகளாவர்.

தென்பகுதியில் கொல்லப்பட்ட சிங்களவர்கள், வடபகுதியில் கொல்லப்பட்ட தமிழர்கள், மஹர சிறைச்சாலையில் கொல்லப்பட்ட கைதிகள், 2012இல் வெலிக்கடையில் கொல்லப்பட்ட கைதிகள் எங்களின் உறவுகள் எங்கள் நாட்டின் பிள்ளைகள் என்பதை நாங்கள் மறக்க முடியாது.

தொடர்ச்சியாக இடம்பெறும் விடயங்களைப் பார்க்கும்போது சுதந்திரத்துக்குப் பின்னர் தாய்மார்களின் கண்ணீரைத் தவிர மக்களுக்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை என்ற கருத்தை நிராகரிக்க முடியாததுபோல் தோன்றுகின்றது. - என்று குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் வியாழன் கடமையேற்பு

கொழும்பு, டிசெ.09

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் நாளை (வியாழன்) கடமையேற்கவுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நிமல் ஜீ. புஞ்சிஹேவா நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக எம்.எம். மொஹமட், எஸ்.பி. திவாரத்ன, கே.பி.பி. பத்திரன மற்றும் ஜீவன் தியாகராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

20ஆவது அரசமைப்புத் திருத்தத்தால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பதவிக் காலம் கடந்த நவம்பர் மாதம் 02 ஆம் திகதியுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது

# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

வே.வரதசுந்தரம்



சாயி தரிசனம் - 3

# ‘அவதாரம் பிரதட்சனம் செய்வதா!’

இங்கிலாந்து சாயி அன்பர் யோகா கமலநாதன் 1993இல் அந்நாட்டு சாயிபக்தர்கள் குழாமுடன் புட்டபர்த்தி யாத்திரை வந்தவேளை, பகவான் பாபா அவர்களை நேர்காணலுக்கு அழைப்பு விடுத்தார்.

உரையாடலின்போது, பாபா வினவினார்:

*‘ஏன் இங்கு வந்துள்ளீர்கள்?’*

நாம் கூறினோம், *‘யாம் உங்களை நேசிப்பதால்’.*

மீண்டும் அதேவினாவினையே எம்மிடம் கேட்டார். *‘எங்கள் மின்கல அடுக்குகளை உயிர்ப்பிக்க’* இதுவே எங்கள் விடையாக இருந்தது.

உடனே *’அப்படியானால் யானென்ன பட்டறையா?’* என்றாரே பாபா. நாம் வாய்விட்டுச் சிரித்தோம்.

*‘ஆம். எங்கள் ஆன்மீக நாட்டத்துக்குப் புத்துணர்ச்சி ஊட்டவே இங்கு நாம் யாத்திரை வருகிறோம்.’* இதுவே எங்கள் நாட்டம்.

பாபாவின் நகைச்சுவையை இரசித்தவாறு, யாத்திரையைத் தொடரும் அடியார்கள் பாபாவின் இளம் வயது அனுபவம் கேட்டு மெய்சிலிர்த்துப் போகிறார்கள். அந்த அனுபவம்தான் என்ன?

சாயிபாபா அவதாரம் என்பதை உணர்ந்ததால், தனது கோயிலைச் சுற்றி அவர் பிரதட்சனம் செய்வதை ஆஞ்சநேயர் விரும்பவில்லை.

புனிதம் வாய்ந்த ஒரு மாதத்தில் அதிகாலை துயிலெழுந்து ஆற்றில் நீராடி ஆஞ்சநேயர் ஆலயத்தை வலம்வந்து வழிபாடு செய்வது நலந் தரும் என்று குழந்தைகளுக்குக் கூறினார் பாபா. அவர்களும் உடன்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் நாள்தோறும் பாபா தலைமையில் அதிகாலை நாலுமணிக்கு ஆஞ்சநேயர் கோயிலுக்குப் பின்னால் இருந்த ஆற்றங்கரை சென்றனர். ஆற்றில் மகிழ்ச்சி பொங்க நீராடினர்.

*‘நீங்கள் ஆலயத்தை வலம் வந்து பிரதட்சனம் செய்துவிட்டு வாருங்கள். நான் இங்கேய இருக்கிறேன்.’* - இப்படி பாபா அவர்களிடம் கூறினார். அவர்களும் சம்மதித்தனர்.

சிறிது தூரம் சென்றதும் அவர்கள் தமக்குள்ளே உரையாடினர். *‘ராஜு (பாபா) இல்லாது நாம் மட்டும் ஆலயத்தை வலம் வருவதா? முடியவே முடியாது. அவர் நமக்கு எத்தனையோ விடயங்களைப் போதித்துள்ளார். அவரே எங்கள் தலைவர். அவர் தலைமை தாங்கி வழிநடாத்த நாம் பின்செல்வோம்.’* - இது அவர்கள் முடிவாக இருந்தது.

*‘நீங்கள் முன்னால் செல்லுங்கள். பின்னால் நான் வருகிறேன்.’* என்றார் பாபா. அவர்கள் சம்மதிக்கவில்லை.

*‘எனக்குக் காலில் நோவு. நான் வரவில்லை.’* - இப்படியும் கூறினார்.

*‘அப்படியா, உங்களை நாங்கள் தூக்கிச் செல்வோம். கவலைப்படாதீர்கள்.’* - என்றனர். அவர்கள் பிடிவாதம் கண்டு வேறு வழியின்றி பாபா சம்மதித்தார்.

அவர்களோடு இணைந்து பாபா ஆஞ்சநேயர் ஆலயத்தை வலம் வரத் தொடங்கினார். எங்கிருந்தோ வந்த ஒரு பெரிய குரங்கு பாபா முன்தோன்றி அவரை ஓரடியேனும் எடுத்து வைக்க முடியாதவாறு தடுத்தது.

*‘இதெப்படி இங்கு வந்தது. இத்தகைய பெரியகுரங்கு எமது கிராமத்திலேயே இல்லையே’* - இப்படிக் குழந்தைகள் ஏங்கினார். அவர்கள் எவ்வளவோ முயன்றும் அவர்களால் அதனைத் துரத்த முடியவில்லை. இறுதியில் அது ஆஞ்சநேயரே அன்றி வேறில்லை என்று தெளிவு பெற்றனர்.

*‘ஆம் இறையவதாரம் எனது ஆலயத்தை வலம் வந்து வழிபாடியற்றுதா? சுவாமி! நானல்லவா வலம் வந்து வழிபாடு செய்யவேண்டும். இது தகுமோ! இது முறையோ!’* - என்று ஏங்கி ஆஞ்சநேயரே குரங்கு வடிவத்தில் தோன்றியிருக்கின்றார். இந்த ஆஞ்சநேயர் ஆலயம் புட்டபர்த்தி கிராமத்தில் கோபுரம் வீதியில் அமைந்துள்ளது.

## ஆஞ்சநேயர் ஏக்கம்

ஸ்ரீ சத்திய சாயிபாபா இறையவதாரம் என்னும் உண்மையை ஆஞ்சநேயரே உணர்த்திய சம்பவத்தை யாத்திரைவந்த அடியார்கள் எண்ணிப் பார்க்கின்றனர்.

புட்டபர்த்தியில் மலையடிவார விளையாட்டு அரங்கில் பகவான் பாபாவின் 65 ஆவது பிறந்ததினத்தன்று 65 அடி ஆஞ்சநேயர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. அச்சிலையைச் செதுக்கியவர் சென்னையைச் சார்ந்த பிரபல்யம் வாய்ந்த சிற்பி சுப்பிரமணியம் ஆவார். பல்வேறு அனுமான் சிலை வடிவமைப்புக்களைக் காட்டியபோதும் பாபா தற்போது அமைந்துள்ள வடிவமைப்பையே விரும்பினார்.



*‘கதியின்றி கலங்க நின்ற நமக்கு துணையாய் நின்று என்துயர் போக்கிய நினக்கு என்ன கைமாறு செய்வேன். இன்றுபோல் என்றும் வாழி’* என்றார். சீதாபிராட்டியார். ஆஞ்சநேயர் சூடாமணியை கையளித்ததும், இராமபிரான் அதனைத்தன் இதயத்தில் அணைத்தார். ஆஞ்சநேயரை நோக்கி *‘புருஷோத்தமா!’* என்று பாராட்டினார். மனிதரில் மாணிக்கம், தலைவன் பணித்த கஷ்டமான காரியத்தைக்கூட செய்துமுடிக்க வல்லவர்.

அனுமான் இராமபிரானிடத்து முற்றாகச் சரணடைந்திருந்தார். அனுமானுக்கும் இராமபிரானுக்கும் இடையேயிருந்த பக்தி குரு - சீட பக்தி. அதனாலே, அனுமான் எப்போதும் இராமபிரானின் திருவடியிலேயே காணப்பட்டார்

ஆஞ்சநேயரைப் பற்றி சாயிபாபா கூறியது கேட்டின்புறுவர் யாத்திரைவந்த அடியார்கள்:

ஆஞ்சநேயர் தனது கடமையை ஆற்றி முடிந்ததும், சீதைப்பிராட்டியிடம் ஆசிநாடிச் சென்றான். *‘அனுமானே! மூப்படையாது வாழ்வீர்!’* என்றார். இது அவருக்கு மகிழ்ச்சி தரவில்லை. இதனைக் கண்ட சீதை *‘மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வீர்!’* என்றார். அப்போதும் அனுமான் திருப்தியடையவில்லை. இதனையுணர்ந்த சீதை *‘மூவுலகும் நின் குணாதிசயங்களைப் பாராட்டும்’* என்று வாழ்த்த கூனிக்குறுகி தலைசாய்த்து நின்றபோதிலும், அனுமான் திருப்தியடையாமையைக் கண்ட சீதை ஈற்றில், *‘இராமபிரான் எக்காலத்தும் நின்னிடத்து அன்பு செலுத்தட்டும்’* என்று ஆசீர்வதித்ததுதான் தாமதம், அனுமான் பெருமகிழ்ச்சியுற்றார்.

*‘இதுவே யான் என்றும் நாடுவது. இராமபிரான் அன்புக்கு யான் என்றும் பாத்திரராக இருத்தல் வேண்டும்.’* - இப்படிக்கூறி இறும்பூதெய்தினார் அனுமான்.

**(தொடரும்)**

# பளை விபத்தில் உயிரிழந்தவர் விடயத்தில் மருத்துவத் தவறு ஏதும் இடம்பெறவில்லை

## வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி விளக்கம்



கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இத்தாவில் பகுதியில் திருகோணமலையில் இருந்து யாழ். நோக்கி பயணித்த அரச பஸ், பாதசாரிகள் கடவையில் சைக்கிளில் கடந்த நபர் மீது மோதியதில் குறித்த நபர் படுகாயங்களுடன் பளை வைத்தியசாலைக்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவரை வைத்தியசாலை நிர்வாகத்தினர் மற்றும் வைத்தியர் வைத்தியசாலைக்குள் அனுமதிக்காது எந்தவிதமான முதல் உதவிகளும் வழங்காது வெளியில் வைத்து கை நரம்பு நாடியை பிடித்து பார்த்தமையில் அந்த நபர் இறந்துவிட்டார் எனக் கூறியுள்ளனர் என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

படுகாயங்களுடன் கொண்டு செல்லப்பட்ட நபர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வரை உயிருடன்தான் இருந்தார், அவருக்கு எந்தவிதமான முதல் உதவிகளும் வழங்காமையாலே குறித்த நபர் உயிரிழந்தார் எனக் கூறி உறவினர்கள் வைத்தியசாலை நிர்வாகத்துடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அதனால், பளை வைத்தியசாலையில் அமைதியின்மை ஏற்பட்டது.

அமைதியின்மை தொடர்பாக அறிந்த பளை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று அமைதியின்மையைக் கட்டுப்படுத்தினர்.

விபத்துக்குள்ளான நபர் பளை அரசர்கேணியை சேர்ந்த 68 வயதுடைய பொன்னையா சிவராசா என தெரிவித்ததுடன் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் க.பகீரதனிடம் வினாவிய போது -

நேற்றைய தினம் (கடந்த திங்கட்கிழமை) விபத்துக்குள்ளான நபரொருவர் பளை வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

அவரை வெளி நோயாளர் பிரிவில் இருந்த வைத்தியர் பார்வையிட்டார். அப்பொழுது விபத்துக்குள்ளான நபர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் மேற்படி நபரின் இறப்பில் எந்த விதமான மருத்துவ தவறுகளும் இடம்பெற்று இருப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்றும் இல்லை. என குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

இறந்தவரின் உடலை சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உண்மையிலே இறந்தவர்களின் உடலை எமது வைத்தியசாலையிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கான வசதிகள் எதுவும் இல்லை. அப்படி அனுப்புவது என்றால் எமது கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிமனையில் உள்ள வாகனத்திலேயே அனுப்புவது வழமை.

அத்துடன் எம்மிடம் ஓர் அவசர சிகிச்சை வாகனம் மட்டும் உள்ளதால் இறந்தவர்களின் உடலை அவசர சிகிச்சை வாகனத்தில் அனுப்புவது இல்லை.

மாறாக இறந்தவரின் உறவினர்களின் உதவியுடன் வாகனங்களில் அனுப்புவது வழமை. ஏனென்றால் இங்கு இறந்தவரின் உடலை பாதுகாப்பதற்கான வசதிகள் எதுவும் இல்லை. நாம் குறைந்த ஆளணித்துவத்துடன் மக்களுக்கு சிகிச்சை வழங்கி வருகின்றோம். - எனக் குறிப்பிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

**இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம். அதையொட்டி இக்கட்டுரைகள் இங்கு பிரசுரமாகின்றன.**



# மனித உரிமைகளை போற்றுவோம்! பேணுவோம்!!

ப்ரியமதா பயஸ்

உலகம் என்று சொல்லப்படுகின்ற, ஜீவராசிகள் வாழ்கின்ற இந்த பிரபஞ்சத்தில் மனிதனுக்கு எப்போதும் முக்கியத்துவம் உண்டு. காரணம் அவனாலேயே ஏனைய அனைத்து உயிரினங்களும் உலக செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப்படுன்றன. ஆனாலும் சிறப்புரிமைகள் எப்போதும் பொதுவாக இருக்கின்றன, இந்த சிறப்புரிமையை சிறப்பிக்க உருவாக்கப்பட்டதுதான் உலக மனித உரிமைகள் தினம் – இன்று அந்த சிறப்பு நாள் உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகிறது.

உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கே என்று வரையறுக்கப்பட்ட – மனிதனால் விட்டுக்கொடுக்க முடியாத – உரிமைகளை மனித உரிமை என்ற வரையறைக்குள் கொண்டுவரலாம்.

ஒவ்வொரு மனிதனும் தனது ஆறாவது அறிவைப் பயன்படுத்தி தானும் சிறப்புடன் வாழ்ந்து ஏனைய உயிரினங்களையும் வாழ வைக்கப் பாடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஆண்டு தோறும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி , உலக மனித உரிமை தினமாகக் கடைப்பிடிக்கபட்டுகின்றது.

1945ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் இந்த தினம் உருவாக்கப்பட்டிருந்தது. மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை தினத்தின் சிறப்பு. உலகில் உள்ள அனைத்து மனிதர்களும் ஒவ்வொருவருக்கொருவர் சமமானவர்களே. எல்லோருக்கும் சம உரிமை உண்டு. மற்றவர்களிடம் இருந்து நாம் என்ன உரிமையை எதிர்பார்க்கிறோமோ அதே உரிமையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும். யாரையும் யாரும் அடிமைப்படுத்தும் அதிகாரம் யாருக்கும் இல்லை .

மனிதனின் தன்னிச்சையான பண்பை – அவனின் பிரிக்க முடியாத உரிமைகளை – அறிந்து தெரிந்து ஏற்றுக்கொள்வதே மனிதனுக்கு வழுங்கும் சுதந்திரம்.

மனித உரிமை என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல. யாராலும் யாருக்கும் வழங்கப்பட்டதும் அல்ல. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது அவனுடன் இணைந்து பிறந்ததுதான் மனித உரிமை. அதனால், ஒருவரின் உரிமையைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை.

இலங்கையைப் பொறுத்தவரை மனித உரிமைகள் தொடர்பில் இன்னமும் சிறந்த விழிப்புணர்வு அவசியம் என்பதை இந்த மனித உரிமைகள் தினத்தில் வலுவாக வலியுறுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது.

எந்த அரசியல் கொள்கையையும் நோக்காகக் கொள்ளாமல் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் தினத்தில் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அவசியமாகவே இருக்கின்றது .

அனைத்து நாடுகளை போலவும் இலங்கை மக்களும் மனித உரிமைகளை அனுபவிக்க காலம் ஒன்று வரவேண்டும் என்பதே அனைவரினதும் அவாவாக உள்ளது.

இன்றைய நாள்வரையும் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், யுத்த குற்றங்கள் என்பன எல்லை மீறிய அளவில் இடம்பெற்று இருப்பது உலகம் அறிந்த விடயமாக இருப்பினும் அவற்றுக்கான தீர்வு இன்னமும் காணப்படாமல் இருக்கின்றமை மனித உரிமைகள் அதாவது மனிதனின் அடிப்படை உரிமைகள் கூட மீறப்பட்டும் மறுக்கப்பட்டும் உள்ளமையை கோடிட்டு காட்டுகின்றது.

இந்த சிறப்பு நாளில் அந்த மீறப்பட்ட உரிமைகளுக்காகவும் குற்றங்களுக்காகவும் கண்டிப்பாக மனிதனாக பிறந்த நாம் குரல்கொடுத்தே ஆக வேண்டும் .

உலக நியதிகள் எமக்கும் வேண்டும் என உரக்க குரல் கொடுக்க தள்ளப்பட்டிருக்கிறோம் – எமக்கான உரிமைகளுக்காகவும் நீதிக்காகவும் குரல் கொடுக்க இன்றைய நாள் பொருத்தமானதாகவே இருக்கின்றது .

அடுத்த சந்ததிக்காயினும் உரிமைகள் கிடைக்கப்பெற, மனித உரிமைகளின் அவசியங்களை நாம் புரிந்துணர்வோடு கடத்த வேண்டியுள்ளோம்.

எமக்கான சுதந்திரம், உரிமை ,செயற்பாடு என்பன இன்னொருவரின் கட்டுப்பாடில் இருக்கும்போது எம்மால் மனிதனாக உரிமை பாராட்டி வாழ முடியாத சூழலை அடக்குமுறை வாழ்வியல் என்றே வரையறுக்க வேண்டும்.

காலப்போக்கில் இவைதான் மனித உரிமைகள் என எண்ணிக் கணக்கிட வேண்டிய சூழல் இலங்கையில் உருவாகாமல் இருக்க மனித உரிமைகளைப் போற்றுவோம்.

# பிறப்போடு வருவது நம் மனித உரிமை!

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எல்லா தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம். இது அடிப்படை உரிமை.

உலக மனித உரிமை தினம் இன்று. உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும், அவனால் விட்டுக்கொடுக்க முடியாத, உரிமைகளை மனித உரிமை என்று சொல்கிறோம். மனிதன் ஒவ்வொருவனும் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ விடவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஆண்டு தோறும் டிசம்பர் பத்தாம் தேதி, உலக மனித உரிமை நாளாகக் கொண்டாடப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1945ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இதில் 53 நாடுகள் அங்கம் பெற்றன.

முதல் பணியாக, சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்க வேண்டும் என்று இந்தக் குழு முடிவு செய்தது. இதற்காக அமெரிக்க அதிபரின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு, 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகளை அடையாளம் கண்டு உலக மனித உரிமைகள் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பித்தது.

இந்தப் பிரகடனத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையில் 58 நாடுகள், 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் தேதி அங்கீகாரம் வழங்கின. இந்த நாள்தான் 1950 ஆம் ஆண்டு முதல் உலக சர்வதேச மனித உரிமை நாளாக அறிவிக்கப்பட்டு ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எல்லா தரப்பினரிடமும் வலியுறுத்துவதே, மனித உரிமை நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம். உலகில் உள்ள எல்லா மனிதர்களும் சமமானவர்களே. எல்லாருக்கும் சம உரிமை உண்டு. மற்றவர்களிடம் இருந்து நாம் என்ன உரிமையை எதிர்பார்க்கிறோமோ அதே உரிமையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும். யாரையும் யாரும் அடிமைப்படுத்தக் கூடாது.

மனிதனின் கௌரவத்தையும் அவனின் பிரிக்க முடியாத உரிமைகளை அறிந்து ஏற்றுக்கொள்வதே அவனுக்கு அளிக்கும் சுதந்திரம், நீதி, சமாதானத்தின் அடித்தளம் என்று சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் முன்னுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல. யாராலும்




யாருக்கும் வழங்கப்பட்டதும் அல்ல. ஒவ்வொரு மனிதன் பிறக்கும்போதும் அவனுடன் பிறந்ததுதான் மனித உரிமை. அதனால், ஒருவரின் உரிமையைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை.

இன்னும் சொல்லப் போனால், ஒரு குடிமகனின் மனித உரிமையைப் பறிக்க அந்த நாட்டின் அரசுக்குக்கூட அதிகாரம் இல்லை. உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் சமமான உரிமைகளும் அடிப்படை சுதந்திரமும் உள்ளன. இவற்றை உலகுக்கு உறைக்கச் சொல்லும் நாள்தான் உலக மனித உரிமை நாள்.

வாழ்வுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமை போன்ற அடிப்படை உரிமைகளை அனைவரும் பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும். உயிர் வாழ்வதற்கான உரிமை, கருத்துச் சுதந்திரம், மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்கான கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற அடிப்படை அம்சங்கள் ஒருவன் மனிதனாக வாழ்வதற்கு உரிய அடிப்படை உரிமைகள். இவற்றையே மனித உரிமை என்று சொல்கிறோம்.

நாடு, சமூகம், பொருளாதாரம், அரசியல், நீதி ஆகியவற்றில் மனிதன் மனிதனாக வாழ்வதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டும். நாடு, மொழி, ஜாதி, இனம் பொருளாதாரம் போன்ற எந்தக் காரணத்தைக் காட்டியும் ஒருவனுடைய இந்த உரிமைகள் பறிக்கப்படக்கூடாது என்பதை வலியுறுத்துவதே உலக மனித உரிமை நாள்.

> “உலகில் உள்ள எல்லா மனிதர்களும் சமமானவர்களே. எல்லாருக்கும் சம உரிமை உண்டு. மற்றவர்களிடம் இருந்து நாம் என்ன உரிமையை எதிர்பார்க்கிறோமோ அதே உரிமையை அவர்களுக்கும் நாம் தர வேண்டும். யாரையும் யாரும் அடிமைப்படுத்தக் கூடாது.”

# சாணக்கியன் முன்வைத்த மீனவர் பிரச்சினைக்கு ‘நம்பிக்கையோடு இருங்கள்’ என டக்ளஸ் பதில்!

கேள்விகளுக்கான பதிலோடு செயற்பாடுகளும் இருக்க வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) வாய்மொழி மூலமான கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நீங்கள் அனைத்து விடயங்களையும் செய்ய முடியும் என கூறுகின்றீர்கள். ஆனால் உங்களுடைய வரவு–செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை முழுமையாக பயன்படுத்தினாலும் கூட இந்த அனைத்து விடங்களுக்கும் செய்யும் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காது.

அதேபோன்று பால்சேனை என்ற பிரதேசத்தில் வாகரையில் அந்த இடத்திலும் கூட ஒரு மீனவத் துறைமுகத்துக்கான சில முன்னேற்பாடுகள் நடந்துள்ளன. அது தொடர்பாகவும் நாங்கள் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் என்றால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 130 கிலோ மீற்றர் கரையோரப்பிரதேசம் உள்ளது.

அதில் சுமார் 15 ஆயிரம் மீனவர்கள் கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 375 ட்ரோலர் படகுகள் மட்டுமே உள்ளன. வாழைச்சேனை துறைமுகம் ஊடாகவே அவை கடற்தொழில் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

15 ஆயிரம் பேருக்கு 375 ட்ரோலர் படகுகளே உள்ளன. தவிரவும் ஆயிரம் சிறிய ரக படகுகளே உள்ளன. எனவே கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் சுமார் 15 ஆயிரம் மீனவர்களின் குடும்பங்களுக்கு உங்களுடைய அமைச்சின் ஊடாக இந்த வருடத்திற்குள் நிதி ஒதுக்கீடு செய்யக் கூடிய வழிமுறைகள் உள்ளனவா? இது நடைபெறக்கூடிய சாத்தியக்கூறு உள்ளதா?



ஏன் என்றால் கோட்டை கல்லாறை எடுத்துக் கொண்டாலும் சரி, பால்சேனையை எடுத்துக் கொண்டாலும் சரி, புன்னகுடாவை எடுத்துக் கொண்டாலும் சரி, இதற்கு முதல் நான் கேட்ட கேள்வி அதாவது ஐஸ் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, இந்த அனைத்து விடயங்களுக்கும் நீங்கள் செய்ய முடியும் என்ற விடயத்தை நீங்கள் இந்த இடத்தில் அழகாகக் கூறியுள்ளீர்கள்.

ஆனால் இவை அனைத்தையும் செய்வதற்கான நிதியை இந்த அரசாங்கம் உங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளதா? – என அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ‘நான் செய்வதை சொல்பவன், சொல்வதை செய்பவன்’ எனப் பதிலளித்தார்.

அத்துடன், மேலதிக பணத்தைப் பெற்றுக்கொண்டாவது இந்த விடயத்தை செய்து முடிப்போம் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இதன்போது மீண்டும் கருத்து வெளியிட்ட சாணக்கியன் எம்.பி. நீங்கள் ரஜினிகாந்தைப் போன்று நான் செய்வதை சொல்வேன், சொல்வதை செய்வேன் என கூறியுள்ளீர்கள். அப்படி நடந்தால் மகிழ்ச்சி எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட சாணக்கியன், இந்த மீன்பிடி துறைமுகங்கள் அனைத்தையும் அமைத்தாலும் கூட ட்ரோலர் படகுகளை பெற்றுக்கொள்வதற்காக மீனவர்கள் பாரியளவிலான செலவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும். அரசாங்க வங்கிகளின் ஊடாக 6 சதவீத வட்டிக்கு கடன் வழங்கப்படுவதாக ஒரு திட்டமும், அரசாங்கத்தினால் 50 வீதத்தை மானியமாக வழங்கும் ஒரு திட்டம் இருப்பதாகவும் நாங்கள் அறிகின்றோம்.

ஆனால் அதனையும் விட நான்கு, ஐந்து மீனவர்களை சேர்த்து வங்கியில் சென்று ஒரு கோடி ரூபாவுக்கு கடனைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களுக்குப் பொறுப்புகளை வழங்குவதற்கான எந்த வசதிகளும் இல்லை.

நேரடியாக மீனவர்களை விடவும் ஒரு சில முதலாளிகளே இதனால் இலாபம் அடைகின்றனர். இதற்கு ஐந்து, ஆறு அல்லது ஒரு 10 மீனவர்களை ஒன்றாக இணைத்து அவர்களுக்கு அரசாங்கத்தால் அந்தப் பிணை உறுதியை வழங்கி, கடன் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து ஏதாவது செய்ய கூடிய திட்டங்கள் உள்ளனவா? ஏன் என்றால் நீங்கள் இந்த துறைமுகங்களை அமைத்தாலும், மீனவர்களுக்கு அந்த இலாபம் செல்லாது. அதனையும் விட மிக முக்கியமானது நீங்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தையும், அந்த கட்டடத்தையும் புனரமைப்பு செய்யவுள்ளீர்கள் எனத் தெரிவித்தீர்கள்.

ஆனால் அதனையும் விட மிக முக்கியமான தேவை ஒன்று உள்ளது. பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். புன்னக்குடாவிலிருந்து களுவங்கேணிக்கு பாலம் ஒன்றை அமைக்க வேண்டும் அங்கிருந்து இங்கே வருகை தருவதற்காக.

தற்போது இந்த மாரி காலத்தில் சுமார் 22 கிலோ மீற்றர்கள் சுற்றி நடந்து வருகின்றார்கள். எனவே அந்த பாலத்தை அமைத்தால் ஒரு கிலோ மீற்றர் தூரம் கூட நடக்க வேண்டிய தேவை ஏற்படாது. எனவே நான் தற்போது உங்களிடம் கேட்டுள்ள இரண்டு கேள்விகளுக்கும் ஒரு நல்ல பதிலுடன் சேர்த்து செயல்பாடுகளும் இருக்கும் என நம்புகின்றேன்.– எனக் குறிப்பிட்டிருந்தார்.

## மழை தொடர்பில் அவதானம் தேவை யாழ். மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு!

மழை வெள்ளம் தொடர்பாக மக்களை அவதானமாக இருக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா அறிவுறுத்தியுள்ளார்.

யாழில் பல இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளதால் பல்வேறுப்பட்ட நோய் தாக்கங்கள் ஏற்படும் அபாயமுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலர் வெள்ளங்களின் ஊடாக நடந்து செல்வதால் தோல் நோய்கள் ஏற்படலாம் என்றும் சேறுகளால் புண்கள் ஏற்படலாம் என்பதால், அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக சிறுவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெள்ளங்களில் தேங்கியுள்ள கழிவு பொருள்கள் உள்ளிட்டவற்றால் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய ஆபத்து உள்ளதால், சளி, காய்ச்சல், ஆஸ்துமா உள்ளிட்ட நோய் தாக்கங்களும் ஏற்படலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீர் நிலைகள், குளங்கள், கிணறுகளில் நீர் மட்டம் அதிகமாக காணப்படுவதனால் அவை தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும், தவறி விழுந்து உயிரிழப்புக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் முகமாக அவை தொடர்பிலான பாதுகாப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை மழை காலங்களில் விபத்துக்கள் ஏற்பட ஏதுவான காரணிகள் காணப்படுகின்றமையால் வாகனங்களை செலுத்தும் போதும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## வேலணை கடற்கரை கழிவுகளை பிரதேச சபையினரால் அகற்றல்!



வேலணை பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலக பகுதியில் யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பிரதான வீதியில் கடற்கரை ஓரமாய் வீசப்பட்டிருந்த பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடிக் கழிவுகள் வேலணை பிரதேச சபையால் நேற்று செவ்வாய்க் கிழமை சிரமதானம் மூலமாக அகற்றப்பட்டிருந்தது.

இந்தச் செயற்பாடானது வேலணை பிரதேச சபை நிர்வாக எல்லைப்பகுதிக்குள் தொடர்சியாக இடம்பெற உள்ளதாக சபையின் செயலாளரால் கூறப்பட்டது.

உடனடி வேலை வாய்ப்புக்கள்

**கணக்காளர் / நிர்வாகி**
*ஒய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் (அரச /அரசசார்பற்ற)
*மும்மொழித்தகைமை.
*கணனி அறிவு குறிப்பிடத்தக்கது.

**சாரதி**
*சாரதி அனுமதிப் பத்திரம் (B1, B)
*நம்பகத்தன்மை உடையவராக இருத்தல் வேண்டும்

**அலுவலக உத்தியோகத்தர்**
*O/L & A/L படித்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 390 8197
076 011 7004

## அக்கரபத்தனை தோன்பீல்ட் பிரிவு முழுமையாக முடக்கப்பட்டுள்ளது

கொழும்பு, நவ.10

அக்கரபத்தனை – எல்பியன் தோட்டத்தில் தோன்பீல்ட் பிரிவு நேற்று (புதன்கிழமை) முழுமையாக முடக்கப்பட்டு பயணக்கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

தோன்பீல்ட் தோட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நபர், குறித்த தோட்டத்தின் பல இடங்களுக்கும் சென்றுவந்துள்ளார். நிகழ்வொன்றிலும் பங்குபற்றியுள்ளார் என சுகாதார அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்தே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி மறு அறிவித்தல் வரும்வரை தனிமைப் படுத்தல் நடைமுறை அமுலில் இருக்கும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, குறித்த தோட்டத்தில் சுமார் 150 பேர் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்படவுள்ளன என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியான பின்னரே தனிமைப்படுத்தலை தொடர்வதா அல்லது பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்துவதா என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

## நிலையியல் கட்டளைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களுக்கு எதிரான வழக்குகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு சந்தேக நபர்களாக இருந்த அனைவரும் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர் என்று விமர்சித்தார். இதற்கு எதிராகக் கடும் எதிர்ப்பை வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்க இயலாது என்று குறிப்பிட்டதுடன், நாடாளுமன்றத்தில் அல்லாமல் வெளியிடங்களில் இதனைக் கூறும்படியும் சவால் விடுத்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கீடு செய்த எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல, உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களைக்கூட நீக்குவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளதாலும், மக்களின் தீர்ப்புக்களை விசாரிக்க நாடாளுமன்றத்தால் நீதிமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்படுவதால் நீதிமன்ற தீர்ப்பு பற்றி சபையில் பேச முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

எனினும், இதனைப் பொருட்படுத்தாமல் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி குறுக்கீடு செய்தும், போலியாக நிலையியல் கட்டளைச் சட்டத்தைப் பயன்படுத்தி குறுக்கீடு செய்ததாலும் சபையில் மேலும் அமளிதுமளி ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் நிலையியல் கட்டளைப் புத்தகத்தை சாமர சம்பத் தஸநாயக்க தூக்கி வீசினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் எழுந்து நிலையியல் கட்டளைச் சட்டத்தைச் சுட்டிக்காட்டி கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. நளின் பண்டார, நிலையியல் கட்டளைச் சட்டங்களைத் தேவையற்ற வகையில் பயன்படுத்தி நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் உறுப்பினர்களின் உறுப்புரிமையை இரத்துச் செய்யவும் நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் இருப்பதால் அவ்வாறு செய்யும்படி சபைக்குத் தலைமை தாங்கிய உறுப்பினரிடம் கோரினார். இதையடுத்து சபை அமைதியின்மை நிறைவுக்கு வந்தது.

## வடக்கு, கிழக்கில் துரித அபிவிருத்தி

### சபையில் நாமல் உறுதி



அடுத்த 5 ஆண்டுகளில் வடக்கு, கிழக்கில் பல அபிவிருத்தித் திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் அபிவிருத்திகளுக்காக அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டதென்றால் அது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில்தான் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது

எங்களின் முன்னைய ஆட்சியில் எவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டதோ அதேபோல் அடுத்த ஐந்து ஆண்டுகளில் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களைத் துரிதமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் சுற்றுலாத் துறை மற்றும் கல்வித்துறையை மேம் படுத்தவும் நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு கூட்டமைப்பினர் தடையில்லை!

### மன்னார் நிகழ்வுக்கு அழைப்பு வரவில்லை; நாடாளுமன்றத்தில் சிறிதரன் குற்றச்சாட்டு



இலங்கையின் முதலாவது காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மன்னாரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டார்கள் என்பதை இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நேற்றுமுன்தினம் மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் திறப்பது குறித்து எமக்குத் தெரியாது. எவரும் அறிவிக்கவும் இல்லை அழைப்பு விடுக்கப்படவும் இல்லை.

நாடாளுமன்றத்தில் இருக்கும் நாம் வெற்றிலையில்மை பார்த்து நிகழ்வுகளுக்குச் செல்ல முடியாது.

போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி நடந்தது என்பதை நாம் நிராகரிக்கவில்லை, ஆனால், வடக்கு, கிழக்கிற்காக ஒதுக்கிய நிதியை வைத்தே தெற்கின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

அரசின் அபிவிருத்திக்கு எப்போதுமே நாம் தயாராக உள்ளோம். எமது மக்களின் நலன் கருதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் ஒன்று சேர்ந்து பயணிக்க நாம் தயாராகவே உள்ளோம். – என்றார்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயராகி 10.12.2020 இல் வெளியிடப்பெற்றது.